தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009

PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்
www.paperboy.biz
VAIGARAIYIL PAPERBOY

Advertise Your Business
MAKE YOUR BUSINESS KNOWN TO ALL

சென்னை மலர்: 01 இதழ்: 263 05.05.2026 செவ்வாய்க்கிழமை
Chennai Volume: 01 Issue: 263 Tuesday pages 8 Rs.5/-
DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY

## கருத்துக்கணிப்புகளை பொய்யாக்கி

# ஆட்சி அமைக்கிறது தமிழக வெற்றி கழகம்!

**சென்னை, மே 5:**

'மாற்று சக்தி' என தமிழக தேர்தல் களத்தில் நின்ற விஜய்க்கு மக்கள் அமோக ஆதரவு அளித்துள்ளனர்.

234 சட்டமன்ற தொகுதிகளில் மதியம் 5 மணி நிலவரப்படி 106 தொகுதிகளில் த.வெ.க. முன்னிலையில் உள்ளது.

திமுக கூட்டணி 71இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது. கொளத்தூர் தொகுதியில் போட்டியிட்ட ஸ்டாலின் பெரும் தோல்வியை சந்தித்துள்ளார்.

அதிமுக கூட்டணி 52 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

பெரம்பூர், திருச்சி கிழக்கு ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்ட விஜய் 2 தொகுதி களிலுமே முன்னிலையில் உள்ளார்.

கோபிசெட்டிபாளையம் தொகுதியில் தவெக நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் வெற்றி பெற்றுள்ளார்.

செங்கோட்டையன் 10 ஆவது முறையாகவும், தொடர்ந்து 5 ஆவது முறையாகவும் வெற்றி பெற்றுசட்டப்பேரவைக்குச் செல்கிறார். சுமார் 13,000 வாக்குகள் வித்தியாசத்தில் செங்கோட்டையன் வெற்றி பெறுள்ளார்.

சமீபத்தில் அதிமுகவில் இருந்து தவெகவுக்குச் சென்ற செங்கோட்டையன் தனது தொகுதியில் முதல்முறையாக தவெக சார்பில் போட்டியிட்டது குறிப்பிடத்தக்கது.

### கோபியில் செங்கோட்டையன் வெற்றி! 10-வது முறையாக எம்எல்ஏ ஆனார்!

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்று வரும் நிலையில் பிற்பகல் 2.30 மணி நிலவரப்படி தவெக - 108, திமுக - 66, அதிமுக - 60 தொகுதிகளில் முன்னிலையில் இருந்து வருகிறது. ஆட்சியமைக்க 117 தொகுதி கள் பெரும்பா ன்மை தேவை.

எடப்பாடி பழனிசாமி, எடப்பாடி தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார்.

ஒன்றிரண்டு அமைச்சர்களை தவிர மற்ற அமை ச்சர்கள் அனை வரும் தோல்வி முகத்தில் உள்ளனர்.

காங்கிரஸ் தலைவர் செல்வப் பெருந்தகை தோல்வியை தழுவி உ ள்ளார்.சென்னை யை பொறுத்த வரை 16 தொகுதி களில் துறைமுகம் தொகுதி, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தவிர மற்ற அனைத்து தொகுதிகளிலும் த.வெ.க. முன்னிலை வகிக்கிறது.

தமிழக சட்டசபை பொதுத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை நேற்று காலை 8 மணியளவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் தொடங்கியது. முதற்கட்டமாக தபால் வாக்குகள் எண்ணப்பட்டன. இயந்திரங்களில் பதிவான வாக்குகள் 8.30 மணிக்கு எண்ணப்பட தொடங்கியது.

மதியம் 1 மணி நிலவரப்படி த.வெ.க. 114, அ.தி.மு.க. கூட்டணி 56, தி.மு.க. 64 தொகுதிகளில் முன்னிலை வகிக்கின்றன. முன்னிலை நிலவரப்படி அ.தி. மு.க. 2-ம் இடத்திலும், தி.மு.க. 3-ம் இடத்திலும் இருக்கின்றன.


சென்னையில் துறைமுகம், சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி தவிர மற்ற தொகுதிகளில் த.வெ.க. வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ளனர். முதல்வர் ஸ்டாலின் உள்பட 31 அமைச்சர்கள் பின்னடைவை சந்தித்துள்ளனர்.

தமிழகத்தைப்பொருத்தவரை, மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் 4,023 வேட்பாளர்கள் போட்டி யிட்டனர். மொத்தம் 5.73 கோடி வாக்காளர்களில் 4.88 கோடி பேர் வாக்களித்தனர்.

75,064 வாக்குச்சாவடிகளில், 1,06,408 வாக்குப்பதிவு இயந்திரங்கள் தலா 75,064 கட்டுப்பாட்டு இயந்திரங்கள் மற்றும் விவிபாட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.

வாக்குப் பதிவு முடிந்ததும் அவை அனைத்தும் தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு சென்று பாதுகாப்பாக வைக்கப்பட்டன.

தமிழக சட்டசபை தேர்தல் களத்தில் இந்தமுறை 4 முனைப் போட்டி நிலவியது. புதிதாக தேர்தல் களம் கண்ட விஜய்யின் தவெக, இந்தத் தேர்தலில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.



### கொளத்தூரில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தோல்வி!

கொளத்தூர் தொகுதியில் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் தோல்வியடைந்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் இன்று காலை முதல் விறுவிறுப்பாக எண்ணப்பட்டு வருகின்றன. கொளத்தூரில் காலைமுதலே திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலின் பின்னடைவை சந்தித்து வந்தார். இதுவரை 16 சுற்றுகள் எண்ணி முடிக்கப்பட்டிருக்கும் நிலையில், தவெக வேட்பாளர் வி.எஸ். பாபுவைவிட முதல்வர் ஸ்டாலின் 7,544 வாக்குகள் பின்னடைவை சந்தித்துள்ளார்.

மேலும், 6 சுற்றுகள் இருக்கும் நிலையில், எண்ணப்பட வேண்டிய மொத்த வாக்குகளைவிட அதிக வித்தியாசம் இருப்பதால் ஸ்டாலின் வெல்ல வாய்ப்பில்லை.

கொளத்தூர் சட்டப்பேரவைத் தொகுதியில் தொடர்ந்து மூன்று முறை முதல்வர் ஸ்டாலின் வெற்றிபெற்றுள்ளார். நான்காவது முறையாக போட்டியிட்ட நிலையில், தற்போது ஸ்டாலின் தோல்வியை சந்தித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் வரலாற்றில் முதல்வர் ஸ்டாலின் இரண்டாவது முறையாக தோல்வியைச் சந்தித்துள்ளார். முன்னதாக, 1991 ஆம் ஆண்டில் சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் தோல்வியைச் சந்தித்தார்.

### பெரம்பூரில் திருச்சி கிழக்கிலும் விஜய் வெற்றி!

தவெக தலைவர் விஜய் பெரம்பூர் தொகுதியிலும் திருச்சி கிழக்கு தொகுதியிலும் விஜய் வெற்றி பெற்றுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை இன்று நடைபெற்று வரும் நிலையில் மாலை 4 மணி நிலவரப்படி தவெக - 107, திமுக - 75, அதிமுக - 52 தொகுதிகளில் முன்னிலையில் இருந்து வருகிறது. ஆட்சியமைக்க 117 தொகுதிகள் பெரும்பான்மை தேவை.

முதல் தேர்தலிலேயே தவெக மிகப்பெரிய அளவில் வெற்றியைப் பதிவு செய்துள்ளது. தவெக தலைவர் விஜய், பெரம்பூர் தொகுதியில் வெற்றி பெற்றுள்ளார். 44,928 வாக்குகள் வித்தியாசத்தில் விஜய் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேபோல திருச்சி கிழக்கு தொகுதியில் விஜய் முன்னிலையில் இருந்து வருகிறார். திருச்சி கிழக்கில் 17,733 வாக்குகள் முன்னிலையில் உள்ளார். திருச்சி கிழக்கில் விஜய் தனது எம்எல்ஏ பதவியை ராஜிநாமா செய்ய வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

### கூட்டம் வாக்காக மாறியது

தேர்தலுக்கு முன்பு வரை தவெகவுக்கு கூடும் கூட்டமெல்லாம் வாக்காகது என்றே கணிக்கப்பட்ட நிலையில், தேர்தலுக்குப் பின்னர் தவெக ஒரு கேம் சேஞ்சர் என்ற வகையில் அணுகப்படுகிறது. இந்த நிலையில் திமுக ஆட்சியைத் தக்க வைக்குமா?, கருத்துக் கணிப்புகளை தவிடுபொடியாக்கி அ.தி.மு.க. ஆட்சி அமைக்குமா? இல்லை யாரும் எதிர்பாராத பலத்துடன் தவெக அரசியல் திருப்பத்தை ஏற்படுத்துமா? என்ற எதிர்பார்ப்புகள் நிலவிய நிலையில், தமிழகத்தில் தவெக எழுச்சி கண்டுள்ளது.

### தி.மு.க. மீது மக்கள் வெறுப்பு

தமிழகத்தில் 2021ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க., ஐந்தாண்டுகளில் மக்கள் மத்தியில் கடும் அதிருப்தியை சம்பாதித்தது. அ.தி.மு.க.வில் ஏற்பட்ட இபிஎஸ், ஓபிஎஸ் பிளவு தங்களுக்கு சாதகமாக இருக்கும் என்று கருதி, தன் மகன் உதயநிதிக்கு துணை முதல்வர் பதவியை கொடுத்தார் முதல்வர் ஸ்டாலின். இந்த செயல், பொதுமக்கள், சொந்த கட்சியினர் மத்தியிலும் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

அது மட்டுமின்றி, துறை அமைச்சர்கள் சரமாரியாக ஊழல்களில் ஈடுபட்டனர். டெண்டர் விடுவதில் தொடங்கி, அரசு பணி நியமனம், குவாரிகளில் கல், மண், எம் சாண்ட் கொண்டு செல்வது வரை எல்லாவற்றிலும் ஊழல் நடந்தது என கடும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அமைச்சர்களே முன்னின்று ஊழல் செய்வதாக அமலாக்கத்துறை ஆதாரங்களுடன் குற்றம் சாட்டியது. ஆனாலும், எந்த நடவடிக்கையும் எடுக்காமல், அமைச்சர்களை பாதுகாத்து முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு. எந்த வேலையும் செய்யாமல் விளம்பரம் மட்டுமே செய்து கொண்டிருப்பதாக, சரமாரியாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டின. வேங்கைவயல் உள்ளிட்ட பல சம்பவங்களில் அரசு மெத்தனமாக நடந்து கொண்டதாக கூட்டணி கட்சியினரே குற்றம் சாட்டினர். மார்க்சிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர், 'இவர்கள் ஏதோ பொற்கால ஆட்சி நடத்துவதாக நினைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று கிண்டல் செய்யும் அளவுக்கு திமுக ஆட்சியின் மீது பல விமர்சனங்கள் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

## இன்றைய நாள்

செவ்வாய்க்கிழமை
(05-05-2026)
பராபவ ஆண்டு, சித்திரை-22
பிறை: தேய்பிறை
திதி
சதுர்த்தி முழுவதும்
நட்சத்திரம்:
கேட்டை நண்பகல் 12.03 வரை பிறகு மூலம்
யோகம்
சித்த/அமிர்த யோகம்
ராகுகாலம்
பிற்பகல் 3.00-4.30 மணி.
எமகண்டம்
காலை 9.00-10.30 மணி
சூலம் - வடக்கு
நல்ல நேரம் :
காலை 8-9 மணி.
மாலை 5-6 மணி.

மேஷம் ..................... புகழ்
ரிஷபம் ..................... உயர்வு
மிதுனம் ............... அமைதி
கடகம் .................. யோகம்
சிம்மம் .................... வெற்றி
கன்னி ..................... பணிவு
துலாம் ................. இன்பம்
விருச்சிகம் ............. ஜெயம்
தனுசு .................. மகிழ்ச்சி
மகரம் ................. பாராட்டு
கும்பம் ................. பயணம்
மீனம் ................. ஆதாயம்

### கேரளாவில் ஆட்சியை பிடிக்கும் காங்கிரஸ் கூட்டணி! அசாமில் ஆட்சியை தக்க வைத்த பாஜக

**புதுடெல்லி, மே 5:**

கேரளாவில் மொத்தமுள்ள 140 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பான்மைக்கு 83 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும். இந்நிலையில், கேரளாவில் 89 தொகுதிகளில் காங்கிரஸ் கூட்டணி முன்னிலையில் உள்ளது. இதன் மூலம் கேரளாவில் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை பிடிக்க உள்ளது.

கேரளா ( 140 தொகுதிகள் - 71 பெரும்பான்மை)

காங்கிரஸ் கூட்டணி - 83 முன்னிலை இடதுசாரிகள் கூட்டணி - 41 முன்னிலை

பாஜக கூட்டணி - 3 முன்னிலை மற்றவை - 13 முன்னிலை - பெரும்பான்மையை தாண்டி முன்னிலையில் உள்ள காங்கிரஸ் கூட்டணி கேரளாவில் ஆட்சியமைக்க உள்ளது.

அசாமில் மொத்தமுள்ள 126 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பான்மைக்கு 64 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும். இந்நிலையில், அசாமில் 98 தொகுதிகளில் பாஜக முன்னிலையில் உள்ளது. இதன் மூலம் அசாமில் பாஜக ஆட்சியை தக்க வைத்துள்ளது. அசாம் காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகாய் ஜோர்ஹாட் தொகுதியில் 23,182 வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்துள்ளார்.

## மேற்கு வங்காளத்தில் மம்தா பானர்ஜி பின்னடைவு.. முதல் முறையாக ஆட்சியை பிடிக்கிறது பாஜக

**கொல்கத்தா, மே 5:**

மேற்கு வங்கத்தில் 15 ஆண்டு மம்தா ஆட்சி முடிவுக்கு வந்தநிலையில் வரலாற்று சாதனை படைத்து பா.ஜ.க. ஆட்சி அமைக்கிறது.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 தொகுதிகளுக்கு இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. முதல்கட்டத் தேர்தல் ஏப்ரல் 23ம் தேதியும் இரண்டாம் கட்டத் தேர்தல் ஏப்ரல் 29ம் தேதியும் நடைபெற்றன. இரண்டாம் கட்டத் தேரத்லில் வாக்குப்பதிவு நடைபெற்ற தொகுதிகளில், பால்டா தொகுதிக்கு வரும் 21ம் தேதி மறு வாக்குப்பதிவு நடைபெற்றது.

மேற்கு வங்கத்தில் முதல்வர் மம்தா தலைமையிலான திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி நடைபெற்று வருகிறது. தொடர்ந்து 15 ஆண்டுகளாக மம்தா பானர்ஜி முதல்வராக உள்ளார். இந்த தேர்தலில் திரிணமூல் காங்கிரஸுக்கு பாஜக கடும் சவாலை கொடுத்தது. பிரதமர் மோடி மற்றும் அமித்ஷா உள்ளிட்ட மத்திய அமைச்சர்கள் மேற்கு வங்கத்தில் முகாமிட்டு தீவிர பிரச்சாரம் செய்தனர்.




இந்நிலையில் 293 தொகுதிகளில் பதிவான வாக்குகள் தற்போது எண்ணப்பட்டு வருகின்றன.

காலை 9.30 மணி நிலவரப்படி பாஜக சுமார் 138 இடங்கள், திரிணாமுல் காங்கிரஸ் சுமார் 120 இடங்கள் பெற்றுள்ளன.

தற்போதைய நிலவரப்படி, இரு கட்சிகளுமே பெரும்பான்மைக்குத் தேவையான 148 இடங்களை இன்னும் எட்டவில்லை. பவானிபூர் தொகுதியில் போட்டியிட்ட முதல்வர் மம்தா பானர்ஜி பின்னடைவைச் சந்தித்து வருகிறார். எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து அதிகாரி பவானிபூர் மற்றும் நந்திகிராம் என இரு தொகுதிகளிலும் முன்னிலை வகித்து வருகிறார்.

வட வங்காளம் தின்காட்டா தொகுதியில் மூன்றாவது சுற்று முடிவில் பாஜக வேட்பாளர் அஜய் ராய், திரிணாமுல் காங்கிரஸ் அமைச்சரும் தற்போதைய எம்.எல். ஏவுமான உதயன் குகாவை விட 5,575 வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலையில் உள்ளார். அஜய் ராய் 19,476 வாக்குகளும், குகா 13,901 வாக்குகளும் பெற்றுள்ளனர். முர்ஷிதாபாத் மாவட்டத்தின் நவ்தா தொகுதியில் பாஜக வேட்பாளர் ஹுமாயூன் கபீர், திரிணாமுல் காங்கிரஸின் சாஹினா மும்தாஜ் கானை விட 2,890 வாக்குகள் முன்னிலையில் இருப்பதாக அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் சுவேந்து பாஜக அடுத்த ஆட்சியை அமைக்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். தனது கட்சி 130க்கும் மேற்பட்ட இடங்களில் முன்னிலையில் இருப்பதாகவும், பவானிபூர் போன்ற தொகுதிகளில் ஆரம்பத்தில் காணப்படும் மாற்றங்கள் அடுத்தடுத்த சுற்று முடிவுகளில் நிலைபெறும் என்றும் கூறியுள்ளார். மேற்கு வங்க மாநிலம் முழுவதும் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

### பா.ஜ.க. வரலாற்று சாதனை

மேற்கு வங்காளத்தில் பெரும்பான்மைக்கு தேவையான இடங்களைவிட அதிக இடங்களில் பாஜக கூட்டணி முன்னிலையில் உள்ளது. பெரும்பான்மைக்கு 148 இடங்கள் தேவை என்ற நிலையில், அதையும் தாண்டி 186 தொகுதிகளில் பாஜக கூட்டணி வேட்பாளர்கள் முன்னிலையில் உள்ளனர்.குறிப்பாக தொழில்துறை மண்டலத்தில் பாஜக அதிக அளவிலான தொகுதிகளில் முன்னிலையைப் பெற்றுள்ளது. திரிணாமுல் காங்கிரஸ் 105 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது.இடதுசாரி கட்சி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. அந்த கட்சி ஒரு தொகுதியில் மட்டுமே முன்னிலையில் உள்ளது. கடந்த 15 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்த திரிணாமுல் காங்கிரசுக்கு எதிராக மக்களின் மனநிலை இருப்பதையே இந்த தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. பா.ஜ.க. வரலாற்கு சாதனை படைத்து ஆட்சி அமைக்கிறது.

## புதுச்சேரி என்.ஆர் காங்கிரஸ் வெற்றி முகம்

**புதுச்சேரி, மே 5:**

30 தொகுதிகளை கொண்ட புதுச்சேரிக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெற்றது. இதில் பெரும்பான்மைக்கு 16 தொகுதிகளில் வெற்றிபெற வேண்டும்.

இந்நிலையில், புதுச்சேரியில் என்.ஆர்.காங்கிரஸ் - பாஜக கூட்டணி 15 தொகுதிகளில் முன்னிலையில் உள்ளது. காங்கிரஸ் கூட்டணி 11 தொகுதிகளிலும், மற்றவை 3 தொகுதியிலும் முன்னிலையில் உள்ளது. புதுச்சேரி சட்டமன்ற தேர்தலில் தட்டாஞ்சாவடி தொகுதியில் 4 ஆயிரத்து 441 வாக்கு வித்தியாசத்தில் முதல்-அமைச்சர் ரங்கசாமி வெற்றிபெற்றார்.



## காங்கிரஸ் பிரமுகரை வீடு புகுந்து தாக்கிய நாம் தமிழர் கட்சியினர்: தம்பதி உள்பட 4 பேர் படுகாயம்



**தக்கலை, மே 05:** காங்கிரஸ் பிரமுகரை வீடு புகுந்து நாம் தமிழர் கட்சினர் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதில் தம்பதி உள்பட 4 பேர் படுகாயம் அடைந்தனர். குமரி மாவட்டம் தக்கலை அருகே கோழிப்போர்விளையை சேர்ந்தவர் நெல்சன் (55). இவர் முளகுமூடு பேரூர் காங்கிரஸ் கமிட்டி தலைவராக உள்ளார். இவரது மகன் ஆல்டிரின் பால் நெல்சன் (24). சென்னையில் வக்கீலாக உள்ள இவர் சமூக வலைத்தளங்களில் பதிவுகள் போடுவது வழக்கம்.

இந்நிலையில் இவரது வீட்டுக்கு நாம் தமிழர் கட்சியை சேர்ந்த பாடி பில்டர் ராஜா பேரோன், பெண் உட்பட 4 பேர் நேற்று முன்தினம் காலை வந்தனர். சமூக வலைத்தள பதிவுகள் குறித்து விளக்கம் கேட்க வேண்டும் என நெல்சனிடம் கூறியுள்ளனர். அப்போது அங்கு வந்த ஆல்டிரின் பால் நெல்சனை பார்த்ததும் இவன் தான் பதிவுகள் போடுபவன் அவனை வெட்டுங்கள் என கூறியுள்ளனர். இதையடுத்து அவர்கள் மறைத்து வைத்திருந்த அரிவாளால் அவரது கையில் வெட்டினர்.

இதனை பார்த்து தடுக்க வந்த அவரது அண்ணன் ஆசீக் பால் நெல்சனை (27) தாக்கியதுடன் தடுக்க வந்த நெல்சன், அவரது மனைவி கலா (51), தாயார் சரோஜா (75), ஆகியோரையும் மிதித்து தாக்கியுள்ளனர். மேலும் வீட்டில் உள்ள பொருட்களையும் சூறையாடினர். இதனால் வீட்டில் அலறல் சத்தம் கேட்கவே ஊர்மக்கள் திரண்டனர். இதனை பார்த்த கும்பல் ஓட முயன்றது. ஆனால் பொதுமக்கள் சுற்றிவளைத்தனர்.

இதையடுத்து காயமடைந்தவர்களை மீட்டு, தக்கலை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். தகவலறிந்து அங்கு வந்த தாரகை கத்பர்ட் எம்எல்ஏ, காயம் அடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன் உரிய சிகிச்சை வழங்க மருத்துவர்களை அறிவுறுத்தினார்.

மேலும் சம்பவம் குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்க போலீசாரையும் அறிவுறுத்தினார். சம்பவ இடத்துக்கு போலீசார் வந்து ராஜா பேரோனை பிடித்து விசாரித்து வருகின்றனர்.

## தவெக வெற்றியை விசில் அடித்துக் கொண்டாடிய நடிகர் ஜீவா!



**சென்னை, மே 05:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் முன்னிலை வகித்துவரும் நிலையில், நடிகர் ஜீவா விசில் அடித்துக் கொண்டாடியுள்ளார். இதன்மூலம் விஜய்யின் வெற்றியை வரவேற்பதாகவும் அவர் சைகை மூலம் சுட்டிக்கட்டியுள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. காலை 8 மணி முதல் வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், பிற்பகல் 3.30 மணி நிலவரப்படி தமிழக வெற்றிக் கழகம் 107 தொகுதிகளிலும், திமுக 72 தொகுதிகளிலும், அதிமுக 55 தொகுதிகளிலும் முன்னிலை வகித்து வருகிறது. தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் கோபிசெட்டிபாளையத்தில் போட்டியிட்ட செங்கோட்டையன், சுமார் 13,000 வாக்குகள் வித்தியாசத்தில் செங்கோட்டையன் வெற்றி பெற்றார்.

தேர்தலில் முன்னிலை வகித்துவரும் விஜய்க்கு ஆதரவு தெரிவித்து நடிகர்கள் பலர் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். அந்த வகையில் நடிகர் ஜீவா விசில் அடித்து தவெக விஜய்யின் வெற்றியை கொண்டாடியுள்ளார்.


## தூத்துக்குடி அருகே திடீர் சூறைக்காற்று 5 ஆயிரம் வாழைகள் முறிந்து சேதம்



**தூத்துக்குடி, மே 05:** தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு திடீரென சூறைக்காற்றுடன் மழை பெய்தது. இந்த சூறைக்காற்றால், தூத்துக்குடி ஸ்பிக்நகர் அருகிலுள்ள அத்திமரப்பட்டியில் 5,000க்கும் மேற்பட்ட வாழைகள் முறிந்து சேதமானது. நேற்று காலை வாழைத் தோட்டங்களுக்கு சென்ற விவசாயிகள், வாழைகள் முறிந்து சாய்ந்து கிடப்பதை கண்டு அதிர்ச்சியும், வேதனையும் அடைந்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், போதுமான தண்ணீர் இல்லாத காரணத்தால் வாழைகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு மிகுந்த சிரமப்பட்டோம். ஓராண்டு முழுவதும் உழைத்த உழைப்பு, தற்போது சூறைக்காற்றால் வீணாகி விட்டது. வட்டிக்கு கடன் வாங்கி விவசாயம் செய்துள்ளோம். எனவே சேதத்தை கணக்கிட்டு நிவாரணம் வழங்க வேண்டும் என்றனர்.

## நாகர்கோவிலில் வீடு அபகரிப்பு அதிமுக மாநில மகளிரணி நிர்வாகி மீது சிபிசிஐடி வழக்கு



**நாகர்கோவில், மே 05:** நாகர்கோவிலில் வீடு அபகரிப்பு தொடர்பாக அதிமுக மாநில மகளிரணி நிர்வாகி மீது சிபிசிஐடி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். குமரி மாவட்டம் எஸ்.டி. மங்காடு அடுத்த அதங்கோடு கொயிக்கதரையை சேர்ந்தவர் ராஜேஷ் (42). இவர் நேசமணிநகர் காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு அளித்திருந்தார். அதில், எனது பெரியப்பா மகன் சுரேஷ் அமெரிக்காவில் வேலை செய்து வருகிறார். அவருக்கு சொந்தமான நாகர்கோவில் நேசமணிநகர் பகுதியில் 66 சென்ட் நிலமும், அதில் வீடும் உள்ளது.

அதில் கடந்த 2022 முதல் அதிமுக மாநில மகளிரணி துணை செயலாளரான ராணி என்பவர் குடும்பத்துடன் வாடகைக்கு குடி வந்தார். அதன் பிறகு அவர், எனது அண்ணனுக்கு வாடகை எதுவும் கொடுக்காமல் அந்த வீட்டை அபகரிக்கும் எண்ணத்தில் செயல்பட்டதால், அந்த இடத்துக்கு அண்ணன் எனக்கு பவர் கொடுத்தார். அதன் பிறகு நான் அவர்களிடம் சென்று வீட்டை காலி செய்ய கூறிய போது என்னிடம் தகராறு செய்தார்கள்.

கடந்த 9.7.2025 அன்று நானும், சாமுவேல், அனிஷ் என்பவரும் சேர்ந்து ராணியிடம் சென்று அக்ரிமெண்ட் முடிந்தும் வீட்டில் எப்படி இருப்பீர்கள் என்று கேட்டதற்கு, எங்களை அவதூறாக பேசி போலி ஆவணங்களை காட்டி மிரட்டி தாக்கினர். எனவே சட்டவிரோதமாக அத்துமீறி நுழைந்து தகாத வார்த்தைகளால் எங்களை பேசி தாக்கிய ராணி உள்ளிட்டவர்கள் மீது வழக்கு பதிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறி இருந்தார். இந்த புகாரின் பேரில் ராணி உள்ளிட்டவர்கள் மீது, நேசமணிநகர் காவல் நிலையத்தில் 29.7.2025 அன்று வழக்கு பதிவு செய்தனர்.

இந்த நிலையில் இந்த பிரச்னை தொடர்பாக மதுரை உயர்நீதிமன்ற கிளையில் ராணி உள்ளிட்டவர்கள் மனு தாக்கல் செய்து, வழக்கு விசாரணையை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டும் என கூறி இருந்தனர். வழக்கை விசாரித்த மதுரை உயர்நீதிமன்ற கிளை, சிபிசிஐடி போலீசார் இந்த வழக்கின் உண்மை தன்மையை விசாரித்து நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டனர். நாகர்கோவில் சிபிசிஐடி போலீசார் இதுதொடர்பாக விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் திடீர் திருப்பமாக தற்போது ராணி மற்றும் உடையார்விளையை சேர்ந்த சதீஷ் ஆகியோர் மீது ஏற்கனவே நேசமணிநகர் போலீசார் பதிவு செய்து இருந்த வழக்கின் அடிப்படையில் ஆவணங்களை பெற்று நேற்று முன்தினம் நாகர்கோவில் சிபிசிஐடி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவு மற்றும் உயர் அதிகாரிகளிடம் இருந்து கிடைக்க பெற்ற ஆணைகளின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதாக சிபிசிஐடி போலீசார் கூறினர்.

பி.என்.எஸ். பிரிவு 296 (பி) (ஆபாசமாக பேசுதல்), 115(2) (காயப்படுத்துதல்), 324 (2) (சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தல்), 329 (4) (வீடு அத்துமீறல்), 351 (2) (மிரட்டி அச்சத்தை ஏற்படுத்துதல்) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது குறித்து ராணி மீது புகார் அளித்த தரப்பினர் கூறுகையில், நீதிமன்றத்தை நாடி இந்த வழக்கை ராணி திசை திருப்ப முயன்றார். ஆனால் அவரது மனுவின் அடிப்படையிலேயே சிபிசிஐடி போலீசார் விசாரித்து, உண்மை தன்மை கண்டறிந்து அவர் மீதே வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றனர்.

## நீட் தேர்வு எழுத வந்த மாணவர்களின் சட்டை காலரை வெட்டிய ஊழியர்கள்: கடும் கெடுபிடியால் பெற்றோர், ஆசிரியர்கள் அதிருப்தி




**வேலூர், மே 05:** வேலூர் மாவட்டத்தில் நேற்று நீட் தேர்வு எழுத வந்த மாணவர்களின் சட்டை காலரை ஊழியர்கள் வெட்டி அகற்றி கடும் கெடுபிடி செய்ததால் பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள் அதிருப்தி அடைந்தனர். நாடு முழுவதும் இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான தேசிய தகுதி மற்றும் நுழைவுத்தேர்வான நீட் தேர்வு நேற்று மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடந்தது. அதன்படி, வேலூர் மாவட்டத்தில் மொத்தம் 15 மையங்கள் அமைக்கப்பட்டு இருந்தது. 15 தேர்வு மையங்களில் 5,736 மாணவர்கள் நீட் தேர்வை எழுத ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. தேர்வை 5,551 பேர் எழுதினர்.

185 ஆப்சென்ட் ஆகினர். நீட் தேர்விற்கு சென்ற மாணவ- மாணவிகள் முழு பரிசோதனைக்கு பின்னரே தேர்வு மையத்துக்குள், நுழைவு சீட்டை காண்பித்த பின்னரே அனுமதிக்கப்பட்டனர். காலர் வைத்த சட்டை மற்றும் டீ சர்ட் அணிந்து வந்த மாணவ- மாணவர்களின் காலரை வெட்டி அகற்றினர். அதேபோல் வேலூர் சாயிநாதபுரத்தில் உள்ள அரசு நிதியுதவி பள்ளியில் நீட் தேர்வு மையத்தில், திருப்பத்தூர் மாவட்டம் அரசு மாதிரி பள்ளியை சேர்ந்த 3 மாணவர்கள் பள்ளி சீருடையில் தேர்வு எழுத வந்தனர்.

அவர்களை பரிசோதனை செய்த அதிகாரிகள், காலர் மற்றும் பட்டன் வைத்த சட்டை அணிந்திருந்ததால் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கவில்லை. இதனால் மாணவர்கள் அதிர்ச்சியடைந்தனர். பின்னர் மாணவர்களுடன் வந்திருந்த ஆசிரியை, அருகில் இருந்த துணிக்கடைக்கு மாணவர்களை அழைத்து சென்றார். அவ்வழியாக வந்த ஒருவர் மாணவர்களை பைக்கில் ஏற்றிச்சென்று, டி-சர்ட் வாங்கி கொடுத்தார்.

அதை அணிந்து சென்ற பிறகு தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்பட்டனர். காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நீட் தேர்வு எழுத சென்ற மாணவனை பரிசோதனை செய்தபோது, வெள்ளி அரைஞாண் கயிறு அணிந்து இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, மாணவனை தேர்வு மைய அதிகாரிகள் வெளியே அனுப்பி வைத்தனர். பின்னர், அந்த மாணவன் வெள்ளி அரைஞாண் கயிற்றை அறுத்து பெற்றோரிடம் கொடுத்து விட்டு, தேர்வு எழுத சென்றான்.

## சித்ரா பவுர்ணமியை முன்னிட்டு வெள்ளிங்கிரி மலையேறிய திருச்சி பக்தர் மர்மச்சாவு 3 மாதத்தில் 7 பேர் பலி



**தொண்டாமுத்தூர், மே 05:** கோவை மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள பூண்டியில் கடல் மட்டத்தில் இருந்து 6 ஆயிரம் அடி உயரத்தில் வெள்ளிங்கிரி மலை உள்ளது. சுமார் 5.5 கிலோ மீட்டர் தூரம் செல்லும் மலை பாதையில் வெள்ளை விநாயகர் கோயில், பாம்பாட்டி சுனை, கைதட்டி சுனை, சீதைவனம், அர்ச்சுனன் வில், பீமன் களி உருண்டை, ஆண்டி சுனை போன்றவையை கடந்து சென்றால் 7வது மலையில் சுயம்பு லிங்கத்தை தரிசிக்க முடியும்.

கரடுமுரடான இந்த மலை பாதையில் பக்தர்களுக்கு மலை ஏற பிப்ரவரி மாதம் முதல் மே மாதம் வரை அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து தினந்தோறும் ஏராளமான பக்தர்கள் மலையேறி சுயம்பு லிங்கத்தை தரிசனம் செய்து வருகின்றனர். இந்த நிலையலில் சித்ரா பவுர்ணமி நாளான மே 1ம் தேதி இரவு முதல் ஏராளமான பக்தர்கள் மலையேறி கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 2ம் தேதி அதிகாலை 7வது மலையில் சாமி தரிசனம் செய்ய வந்த 35 வயது மதிக்கதக்க பக்தர் ஒருவர் சுயநினைவின்றி இருப்பதாக வனபணியாளர்களுக்கு தகவல் கிடைத்தது. இதனை தொடர்ந்து அவர்கள், சம்பவ இடத்திற்கு சென்று மருத்துவர் உதவியுடன் பரிசோதனை செய்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்தது தெரியவந்தது. இதனை தொடர்ந்து அவரது உடலை டோலி மூலம் அடிவாரத்திற்கு கொண்டு வந்தனர்.

பின்னர் பிரேத பரிசோதனைக்காக கோவை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து ஆலாந்துறை போலீசார் வழக்குபதிந்து விசாரணை மேற்கொண்டதில் இறந்த பக்தர் திருச்சி மாவட்டம் மணப்பாறையை சேர்ந்த குமாரவேலு (38) என்பது தெரியவந்தது. இந்தாண்டு மலையேற்ற அனுமதி வழங்கப்பட்ட பிப்ரவரி முதல் தற்போது வரை 3 மாதத்தில் 7 பக்தர்கள் உயிரிழந்துள்ளதாக வனத்துறையினர் கூறினர்.

## எதிர்பார்ப்புகளைக் கடந்து விஜய் வெற்றி : எஸ்.ஏ. சந்திரசேகர்



**சென்னை, மே 05:** தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்பார்ப்புகளைக் கடந்து விஜய் வெற்றி பெற்றுள்ளதாக அவரின் தந்தை சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் எதிர்பார்ப்புகளைக் கடந்து விஜய் வெற்றி பெற்றுள்ளதாக அவரின் தந்தை சந்திரசேகர் தெரிவித்துள்ளார். விஜய்யின் வெற்றியால் ஒரு தந்தையாக பெருமை அடைவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளர்களுடன் விஜய்யின் தந்தை எஸ்.ஏ. சந்திரசேகர் பேசியதாவது: விஜய்யின் வெற்றியை மக்கள் கொண்டாடுகின்றனர். விஜய்யின் வெற்றியால் ஒரு தந்தையாக பெருமை கொள்கிறேன். தங்கள் குடும்பத்தில் ஒருவராக விஜய்யை மக்கள் பார்க்கின்றனர். இதனால் இந்த வெற்றி சாத்தியமாகியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு வருகின்றன. காலை 8 மணி முதல் வாக்குகள் எண்ணப்பட்டு வரும் நிலையில், பிற்பகல் 3 மணி நிலவரப்படி தமிழக வெற்றிக் கழகம் 104 தொகுதிகளிலும், அதிமுக 71 தொகுதிகளிலும், திமுக 59 தொகுதிகளிலும் முன்னிலை வகித்து வருகிறது.

## காட்டுத்தீ காரணமாக மூடப்பட்ட பைக்காரா அருவி மீண்டும் திறப்பு: சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி



**ஊட்டி, மே 05:** காட்டுத்தீ காரணமாக மூடப்பட்டிருந்த பைக்காரா அருவி இரு வாரங்களுக்கு பின் நேற்று முதல் திறக்கப்பட்டதோடு, சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். நீலகிரி மாவட்டத்தில் கோடை வெயிலின் தாக்கம் காரணமாக நீலகிரி வனக்கோட்டத்துக்கு உட்பட்ட கிளன்மார்கன், பைக்காரா, பார்சன்ஸ்வேலி வனப்பகுதிகளில் காட்டுத்தீ ஏற்பட்டது. பைக்காரா அருவியை ஒட்டியுள்ள வனங்களில் காட்டுத்தீ ஏற்பட்ட நிலையில் அதனை அணைக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டனர்.

காட்டு தீ காரணமாக சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி கடந்த மாதம் 19ம் தேதி முதல் பைக்காரா அருவி மூடப்பட்டு சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்படவில்லை. இயல்பு நிலை திரும்பிய பின் அனுமதிக்கப்படுவார்கள் என வனத்துறையினர் தெரிவித்தனர். இந்த சூழலில் பார்சன்ஸ்வேலி, பைக்காரா உள்ளிட்ட பகுதிகளில் காட்டுத்தீ முழுமையாக அணைக்கப்பட்ட நிலையில், தற்போது மழை பெய்து வருவதால் காட்டுத்தீ அபாயம் நீங்கியுள்ளது.

இதனை தொடர்ந்து மாவட்ட வன அலுவலர் கஷ்யப் ஷஷாங்க் ரவி உத்தரவின் பேரில் 14 நாட்களுக்கு பின் நேற்று முதல் பைக்காரா அருவி திறக்கப்பட்டு சுற்றுலா பயணிகள் பார்வையிட அனுமதிக்கப்பட்டனர். இதனால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியுடன் சுற்றுலா தலங்களை பார்வையிட்டு ரசித்தனர்.

## தவெக தலைவர் விஜய்க்கு தமிழிசை வாழ்த்து!



**சென்னை, மே 05:** தவெக தலைவர் விஜய்க்கு பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழகத்தில் மயிலாப்பூர் தொகுதி வேட்பாளரான தமிழிசை சௌந்தரராஜன் வாக்கு எண்ணிக்கையை பார்வையிட்டதோடு, செய்தியாளர்களை சந்தித்து, தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் தேர்தலில் வெற்றி பெற்றதற்கு வாழ்த்துகளை தெரிவித்தார்.

தொடர்ந்து, செய்தியாளர்களிடம் பேசிய அவர், "அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவரான விஜய்யை மனதார வாழ்த்துகிறேன்.

மக்கள் நம்பிக்கையோடு, தமிழக முழுவதும் வாக்களித்ததற்கு சிறப்பான பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

பின்னடைவை சந்திக்கும் வேட்பாளர்கள் சோர்வடைய வேண்டாம். இது வெறும் தேர்தல் வாக்குகள் மட்டுமே, ஒரு போட்டியாகதான் பார்க்க வேண்டும்" என்று தெரிவித்தார்.

## தேசிய அளவிலான போட்டித் தேர்வுகளுக்கு தயார்படுத்த பிளஸ் 1, பிளஸ் 2 புதிய பாடத்திட்டங்கள்: மே 11 முதல் சென்னையில் சிறப்புப் பணிமனை



**நாகர்கோவில், மே 05:** தமிழகத்தில் வரும் 2026-2027 கல்வியாண்டில் 11 மற்றும் 12-ஆம் வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்டம் மற்றும் கலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கான பணிகளைத் தமிழக அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இதற்காக, மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் சார்பில் பாட வல்லுநர்களைக் கொண்டு விவாதங்கள் நடத்தப்பட்டு, மாநிலப் பாடத்திட்டத்தைச் சர்வதேச தரம் மற்றும் பிற மாநில வாரியங்களின் பாடத்திட்டங்களுடன் ஒப்பீடு செய்யும் பணிகள் ஏற்கனவே நிறைவடைந்துள்ளன.

இதன் தொடர்ச்சியாக, மேம்படுத்தப்பட்ட புதிய பாடத்திட்டங்களை ஆய்வு செய்து இறுதி செய்வதற்கான சிறப்புப் பணிமனைகள் சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இம் மாதம் நடைபெற உள்ளன. முதல் கட்டமாக மே 11-ம் தேதி முதல் மே 15-ம் தேதி வரையிலும், இரண்டாம் கட்டமாக மே 18 முதல் மே 22-ம் தேதி வரையிலும் இந்தப் பணிமனைகள் நடைபெற உள்ளன.

இதில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அரசு மற்றும் தனியார் கல்லூரி விரிவுரையாளர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களின் முதுநிலை விரிவுரையாளர்கள் மற்றும் அனுபவம் வாய்ந்த அரசுப் பள்ளி முதுகலை ஆசிரியர்கள் என 100-க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் பங்கேற்கின்றனர். கணிதம், இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல், கணினி அறிவியல், பொருளியல், வணிகவியல் மற்றும் அரசியல் அறிவியல் உள்ளிட்ட அனைத்து முக்கியப் பாடங்களுக்கும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டுப் புதிய பாடப்பகுதிகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட உள்ளது.

திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு

PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE!
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

---

டீலர்கள் தேவை
மைலேஜ் பூஸ்டர்
20% ~ 30%
மிக அதிகமான மைலேஜ் குறைந்த புகை சுலபமான வாகன ஓட்டம் குறையும் மாசு
நேரடி விற்பனையாளர்களும் டீலராகலாம்
Manufactured By: Dlag Technologies, Chennai 33
போன் 63746 73041

---

நிலம் தேவை
தெற்கு சென்னை
திருப்போரூர் to செங்கல்பட்டு ரோடு
1 to 2 ஏக்கர்
தொடர்புக்கு:
Ph. 6384617773

---

SUN SHINE PROPERTY
(Property & Developers)
லேயவுட், நிலம் & ஷேரிங் டாக்குமெண்ட்ஸ் தேவை
மனை விற்பனை
• பொன்மார் • சித்தாலப்பாக்கம்
600, 850, 900 sqft
முகவரி: K.K. நகர் சென்னை - 78 | தொடர்புக்கு: PH.9840804617

---

Annai Violet Arts & Science College
(Affiliated to the University of Madras, Co-Ed | NAAC Accredited)
UG & PG COURSES
ADMISSIONS OPEN
Ph : 044-26861611 | 26864684 | 9344900911 | 6383425388

---

WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE - ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

---

சிங்கபெருமாள்கோயில்
S.P கோயில். On. GST Road
2 ஏக்கர் விற்பனை
1 ஏக்கர் 25cr
வண்டலூர் கேளம்பாக்கம் ரோடு
17 ஏக்கர் விற்பனை
1 acre 16 cr
Ph. 9566055082

---

EMI 50%
50% OFFER
PLOT FOR SALE
SITE NO: 2
SITE NAME: ஸ்ரீ நகர்
LOCATION: கருங்குழி, மேலவளம்பேட்டை
SRI DEVELOPERS
LOCATION: ADAMBAKKAM, GUINDY.
OUR PROJECTS
SITE NAME: BHARATHI NAGAR
LOCATION: MULLI, MADHURANTHAGAM.
CONTACT US NOW FOR BOOKING!
PH. NO: 8220711499, 8870158259

---

முருகன் துணை
A.S.R
ரியல் எஸ்டேட்
காஞ்சிபுரம்
சுலப தவணை உள்ள வீட்டு மனைகள் வாங்க, விற்க மற்றும் பட்டா மாறுதல் பெயர் மாற்றம் செய்து தரப்படும்.
காஞ்சிபுரம், செய்யாறு உள்ள வீட்டு மனைகள் மற்றும் உள்ள அனைத்து மாவட்டகளிலும்
அணுகவும்
7305025591, 9578622711

---

GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும்
சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE
ரூபாய் ₹1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!!
10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

---

PLOTS FOR SALE
SRI DEVELOPERS
மனைகள் விற்பனைக்கு
கிண்டி
மதுராந்தகம், கருங்குழி, ஒரகடம், படப்பை
EMI Available
BANK LOAN Available
CONTACT: 8220711499, 8870158259

---

ePAPER PUBLISHING
WEBSITE / SOFTWARE
Publish | Manage | Deliver
Complete Solution for ePaper Publishing
COMPLETE ePAPER WEBSITE / SOFTWARE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
CALL / WHATSAPP: 9040463899

---

JUST Xth PASS
JOB OPPORTUNITY
₹ 25,000/- PER MONTH *
All Taluks & Districts in ALL STATES in INDIA
FRESHERS CAN APPLY
ATTRACTIVE SALARY
GROWTH OPPORTUNITIES
SECURE YOUR FUTURE
APPLY NOW!
Call / WhatsApp: 8122664699
*Terms & Conditions Apply

---

WANTED
READYMADE SHOWROOM:
• Sales Man / Sales Girl
RESTAURANT :
• Bryani Master
• Chinese Master
• Atho Master
• Chef
• Helper
OTHER POSITIONS:
• Accounts
• Billing
• Internet Engineer
PLACE: T NAGAR, NAVALUR
CALL / WHAT'SAPP: 7550123560 6369528629

---

நிலம் தேவை
தெற்கு சென்னை
சென்னை
திருப்போரூர்
1 - 2 ஏக்கர்
செங்கல்பட்டு
திருப்போரூர் - செங்கல்பட்டு ரோடு
உடனடி தேவை!
தொடர்புக்கு
Ph: 6384617773

---

₹ 15000 - 21000 | Monthly
Full Time Job Apply, Fresh or Experienced,
100% Job Available Here. No registration fee, Direct Job,
Chennai, Tamilnadu,
- 12th to Graduate and Diploma/ITI Qualified and Other Degree Holders.
- Back Office,
- Data Entry,
- Tele Caller's,
- Field officer,
- Team management, Male/Female Both Can Apply,

Share your Resume with Photo to
77899 41009

---

WANTED
Work From Home Opportunity
Telecallers Required
Also Hiring for IT Jobs
✓ Salary: ₹10,000 - ₹15,000
✓ Attractive Incentives
✓ Flexible Work From Home Option
Freshers & Experienced Both Can Apply
Contact Now: 9566072935

---

D.சக்திவேல்
Phone: 9940374962

---

ADVERTISE WITH US
7789941009

---

PLOT FOR SALE
பொன்னேரி, திருவள்ளூர், கடம்பத்தூர் அருகில்
வீட்டு மனைகள் விற்பனைக்கு
BANK LOAN AVAILABLE
Contact: 9841495210

---

WANTED
• LAB HELPER
• OFFICE BOY
• GARDENER
CHEMBARAMBAKKAM
CALL US 7550093245 / 7358696451

---

WANTED
ELECTRICIAN SUPERVISOR / ELECTRICIAN
EGMORE, MOUNT ROAD
CALL US 7550093245 / 7358696451

---

திருமுடிவாக்கம்
அருகாமையில் அமைந்துள்ள
சாரதா கம்பெனிக்கு
ஆட்கள் தேவை
ஆண்கள் மட்டும்
வயது: 18 முதல் 35 வரை
கல்வி தகுதி
10 முதல் any Degree
தங்கும் இடம் உணவு வசதி உண்டு
ESI , PF , Attendance Allowance போன்ற அனைத்து வசதிகளும் உண்டு
சம்பளம் :
18,000 முதல் 22,000 /-
தொடர்புக்கு :
9962400330 , 9962400319 , 9962400336
மெயில் : hrsarathagroup@gmail.com

---

MATRIMONY WEBSITE/SOFTWARE
VIVAH | SHAADI | PELLI | KALYANAM
Find Your Perfect Life Partner
Trusted by Thousands, Chosen for a Lifetime
COMPLETE MATRIMONY WEBSITE FOR JUST ₹2999/- PER YEAR
HOSTING Included | ADMIN PANEL Included | MEMBER PANEL Included
ALL ESSENTIAL FEATURES
GET YOUR PROFESSIONAL MATRIMONY WEBSITE TODAY!
BEST PRICE BEST SOLUTION
CALL US 9040463899
WEBSITE www.matrimonyweb.in

---

WANTED
OFFICE BOY
GUINDY
CALL US 7550093245 / 7358696451

---

WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

# கவிதை அரங்கம்!



நிலவில்லாத வானம் போல
இருந்தேன்,

நிலவாய் நீ வந்து ஒளி
தந்தாய்!

மழையில் நனையும் மண்
வாசனை போல,

மனதில் ஒட்டிக்கொண்டது
உன் ஞாபகம்.

இதயம் துடிப்பது
உனக்காகத் தான்,

இமைகள் மூடுவது
உன்னைத் தேடித்தான்!

தூரம் என்பது வெறும்
எண்ணிக்கை தான்,

துணையாய் நீ இருந்தால்
அது சொர்க்கம் தான்.

## வாழ்க்கை தத்துவம்...



எதையும் மிகையாகச் செய்யாதே.

காலம் காயங்களை ஆற்றும்.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை.

ஆடம்பரமே அழிவுக்குக் காரணம்.

ஆரோக்கியமே மகா பாக்கியம்.

கல்வி அழியாத செல்வம்.

ஒழுக்கம் உயிருக்கு மேலானது.

அனுபவம் ஒரு சிறந்த ஆசிரியர்.

தர்மம் தலைகாக்கும்.

நிதானமே வெற்றியைத் தரும்.

# கலையும் கனவுகள்...



பத்து மணிக்கு நிகழ்ச்சி தொடங்கும் என அறிவிப்பு செய்தும் இப்போ மணி பத்தரை ஆகுது இன்னும் பத்துப்பேர்க்கூட வரல,,, அரங்கத்தில் நிகழ்ச்சி நடத்துவதில் இந்த சிக்கல் வேற இருக்கு பொது இடத்தில் நிகழ்ச்சி என்றால் கூட்டம் கூடிடும் பிரச்சனை இல்லை,,, பதினோரு மணியாகப்போகுது இப்பதான் ஒவ்வொருத்தராக வந்துக்கொண்டு இருக்கிறார்கள் எப்படி இருந்தாலும் பதினோரு மணிக்கு நிகழ்ச்சியைத் தொடங்கிடலாம் ஒரு நாலுப் பாட்டு பாடச்சொன்னா அதுக்குள்ள வந்திடுவார்கள் மழை வேற லேசா தூறிக்கிட்டு இருக்கு நெனச்சமாதரி தோழர்கள் வருவார்களாயென தெரியவில்லை கவலையோடு செயலாளர் கிராமியப்பாடகர் புன்சைபூமிநாதனை அழைத்து ஒரு நாலுப்பாட்டு பாடுங்க தோழர் பிறகு நிகழ்ச்சியை தொடங்கலாமென்றார்.

இது மாதாமாதம் நடக்கும் நிகழ்ச்சிதான் இன்று ஒரு புத்தகம் வெளியீடு இருக்கு அந்த புத்தகத்தை வெளியிட்டு பேசுவதற்காக சென்னையிலிருந்து செண்பகராமன் என்ற இலக்கிய ஆளுமை வந்திருக்கிறார்,,, பந்தாவா ஒருகும்பலைக்கூட்டினாதானே அவருக்கும் மைக்கைப் பிடித்துப்பேச ஆர்வமிருக்கும் இன்னும் பாதி நாற்காலிகள் காத்துக்கொண்டுதான் இருக்கிறது உச்சக்குரலில் "பொண்ணுப்பொறக்குமா ஆணுப்பொறக்குமா" என பாடக்கொண்டிருந்தார் புன்சை பூமிநாதன் செயலாளர் அரங்க வாசலிலேநின்றுவருபவர்களை புன்னகையோடு வரவேற்றார் கோபத்தைக்காட்டமுடியாதே,,,

நாலுப்பாட்டு முடிந்தவுடன் கவிஞர் முன்னா வரவேற்புரை நிகழ்த்தி நிகழ்ச்சிக்கு தலையேற்க கவிஞர் அரங்கநாயகியை அழைத்தார் அவர் தன்பங்குக்கு சில வார்த்தைகள் பேசிவிட்டு நேரம்கருதியாம்,,,, சிறப்பு அழைப்பாளர் ,மற்றும் நூலாசிரியர் இருவரையும் மேடையில் வந்து அமரும்படி மைக்கில் அறிவிப்பு செய்தார் இதற்கிடையே டீயும் பிஸ்கெட்டும் வாங்கி வரும்படி ஒரு தோழரை அனுப்பி வைத்தார் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்.

தோழர்களே இப்போது கவிஞர் செல்லாண்டி அவர்களின் "வாடியப்பூக்கள்" என்ற கவிதைநூலை தோழர் செண்பகராமன் அவர்கள் வெளியிட மக்கள் சேவை மையத்தின் தலைவர் கரிகாலன் அவர்கள் பெற்றுக்கொள்வாரென விழாத்தலைவர் அறிவிப்பு செய்ய,,, யாரும் எந்த ரியாக்சனும் காட்டவில்லை இதைக்கண்ட அரங்க நாயகி இங்கே இருக்கைகள் சும்மா இருந்தால் பரவாயில்லை உங்கள் இரு கைகள் சும்மா இருக்க வேண்டாம் பலத்தக் கரக்கோசம் எழுப்பி படைப்பாளியை உற்சாகப்படுத்துங்கள் என்றார் பிறகு சிறப்பு அழைப்பாளர் செண்பகராமன் நூலைப்பற்றிப் பேசும்போது,,,,

இக் கவிதைத் தொகுப்பு இடதுசாரி சிந்தனையை தங்களுக்குள் வரித்துக் கொண்டிருக்கிறது தோழரது படைப்புகள் பெரும்பாலும் பிரச்சாரங்களாகத்தான் இருக்கின்றன என்ற பொதுவான கருத்து வாசகர்களிடம் இருக்கின்றன சரிதான்..! ஆனால்,எனது கேள்வியெல்லாம் ஏன் பிரச்சாரங்களாக இருக்கக்கூடாது.?என்பதுதான் உங்களுக்கு தெரிந்த உலக இலக்கியங்களிலெல்லாம்மனித குலத்தின் மேம்பாட்டிற்காக சிந்திக்கப்பட்டவை என்று எதையெல்லாம்எண்ணுகிறீரோ.. அதையெல்லாம்தான் இடதுசாரி சிந்தனைகள் என்று சொல்கிறோம்.

கதையோ கவிதையோ கட்டுரையோ..எழுதும் முறைகளில் வெவ்வேறான உத்திகள் இருக்கலாம் அது உங்கள் வாசிப்பு அனுபவத்திற்கேற்ப பிடிக்கலாம் அல்லது பிடிக்காமல் கூட போகலாம் ஆனால் அந்தப் படைப்பின் மைய அச்சாக இருக்கின்ற கருவை,கருத்துகளை நீங்கள் புறந்தள்ளவே முடியாது இந்த அணுகுமுறையோடுதான் நான் படைப்புகளை அணுகுகிறேன்.

தோழரின் படைப்புகளும் அவ்வாறுதான் பிரச்சாரங்களையும்கவிதைகளின்வாயிலாக நன்றாகவே கொண்டு செல்ல முடியும்என்பதை,மிகவும்எளிய மொழியில் சிறுவர்களுக்கும் புரிகிற வகையில்,தமிழ்படிக்கத் தெரிந்த அனைவருமே புரிந்து கொள்ளும் வகையில் தனது நூலைத் தந்திருக்கிறார் இது அவரின் முதல் நூல்போலவே தெரியவில்லை நல்ல முதிர்ச்சி இருக்கிறதுமென்மேலும் அவர் இச்சமூகத்திற்குபலநூல்களைத் தந்து பேரும் புகழும் அடைய எனது வாழ்த்துகள் அவர் பேசிக்கொடிருக்கும்போதே எல்லோருக்கும் டீயும் பிஸ்கெட்டும் வழக்கப்பட்டது சிறிய சலசலப்புக்கிடையே கவிஞர் செல்லாண்டி ஏற்புரை வழங்கினார் தான் இருபது ஆண்டுகளாக கவிதை எழுதுவதாகவும் இதுவரை ஒரு புத்தகம்கூட போடுவதற்கு வாய்ப்பு வரவில்லை இதுதான் எனது முதல் புத்தகம் இதற்காக பல தோழர்கள் என்னை உற்சாகப்படுத்தி ஊக்குவித்தார்கள் அவர்களுக்கு என் நன்றியை இந்த நேரத்தில் தெரிவிக்கின்றேன் என அமர்ந்தப்பின்னர் விழாத்தலைவர் ஒரு அறிவிப்பு செய்தார் இப்போது வெளியிடப்பட்ட நூல் தமிழ் இலக்கிய உலகில் போற்றிப் பாதுக்காக்க வேண்டிய பொக்கிசியம் இந்த இலக்கியவாதியை வளர்க்கவும் அவருக்கு உற்சாகம் ஏற்படவும் அனைவரும் ஒரு புத்தகம் வாங்கிச் செல்லவும் இதுதான் படைப்பாளிக்கு நாம் செய்ய வேண்டிய உதவி,,, காசுக்கொடுத்து ஒரு நல்லப் புத்தகத்தை வாங்குவதற்கு ஈடாக வேறு எதையுமே நாம் வாங்கமுடியாது என ஓர் அறிஞர் சொல்கிறார் எனவேதோழர்களே வாய்ப்புள்ளதோழர்கள் வாங்கிச் செல்லுங்கள் என்றார்.

எல்லோரின் இருக்கையிலும் புத்தகம் கொண்டித் தரப்பட்டது அவர்கள் ஒரு கையில்கூட தொட்டுக்கூட பார்க்கவில்லை எல்லோருமே ஒவ்வொருகாரணம்ரெடிமேடாக வைத்திருந்தார்கள்,,, சில்லரை இல்லை,அவசரமா வந்துட்டேன்,இன்னொரு நாளைக்கி வாங்கிக்கொள்கிறேன்,இப்படி ஆளாளுக்கு சொல்ல கவிஞர் முகம் வெளுரிப்போய் கிடந்தது ஒருசிலர்பிறகுஜிபேபன்றேன்னு வாங்கிட்டுப் போனார்கள் பன்னுவாங்கலான்னுதெரியாது ஒரு சிலர் என்ன தோழா நான்கூட பணம் தரணுமா ஒரு புத்தகம் கொடு தோழான்னு இலவசமா வாங்கிட்டாங்க,,, பார்வையாளர்கள் வாங்கா விட்டாலும் பரவாயில்ல படைப்பாளிகள்கூட வாங்குவதில்லை அப்படியே இலவசமாக் கொடுத்தாலும் அதை வாசித்துவிட்டு முகநூலிலோ வாட்ஸ் அப் குழுவிலோ விமர்சனம் செய்வதில்லை அதைவிடுங்க ஒரு போன்பன்னிக்கூட விமர்சனம் செய்வதில்லை கவிஞர் கைக்கு ஒருபுத்தகத்தின் காசுக்கூட வரவில்லை விழாவிற்கு வரும்போது சிரித்தப்படி புத்தகமூட்டையை தூக்கி வந்தவர் விழா முடிந்து எடைக்குறைந்த மூட்டையை சுணக்கத்தோடே சுமந்துச்சென்றார். புத்தகம்போடும் எழுத்தாளர்களுக்கு உதவிசெய்ய வேண்டாம் உயரிய விருது தரவேண்டாம் உரிய விலைக்கொடுத்தாவது புத்தகம் வாங்கலாமே அவர்கள் கனவுகள் கலையாமல் இருக்குமே.

**- நாகை ஆசைத்தம்பி**
**கோவை**

# தினம் ஒரு சமையல்



## தக்காளி சாதம்

தேவையான பொருட்கள்:

சமைத்த சாதம்: 1 கப் (உதிரியாக வடித்துக்கொள்ளவும்)
பழுத்த தக்காளி: 3 (பொடியாக நறுக்கியது)
பெரிய வெங்காயம்: 1 (நீளவாக்கில் நறுக்கியது)
பச்சை மிளகாய்: 2 (நீளமாக கீறியது)
இஞ்சி-பூண்டு விழுது: 1 தேக்கரண்டி
கடுகு: 1/2 தேக்கரண்டி
சீரகம்: 1/2 தேக்கரண்டி
கடலைப்பருப்பு: 1 தேக்கரண்டி
கறிவேப்பிலை: சிறிதளவு
மஞ்சள் தூள்: 1/4 தேக்கரண்டி
மிளகாய் தூள்: 1/2 தேக்கரண்டி (காரத்திற்கு ஏற்ப)
கரம் மசாலா தூள்: 1/2 தேக்கரண்டி
கொத்தமல்லி தழை: சிறிதளவு
எண்ணெய் / நெய்: 2 மேஜைக்கரண்டி
உப்பு: தேவையான அளவு



செய்முறை:


தாளித்தல்: அடுப்பில் கடாய் வைத்து எண்ணெய் அல்லது நெய் ஊற்றி சூடானதும், கடுகு, சீரகம், கடலைப்பருப்பு மற்றும் கறிவேப்பிலை சேர்த்து பொரியவிடவும்.
வதக்குதல்: அடுத்து, நறுக்கிய வெங்காயம் மற்றும் பச்சை மிளகாய் சேர்த்து வெங்காயம் பொன்னிறமாகும் வரை வதக்கவும். பின்னர் இஞ்சி-பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும்.
தக்காளி மசாலா: நறுக்கிய தக்காளியைச் சேர்த்து நன்கு வதக்கவும். தக்காளி மென்மையானதும், மஞ்சள் தூள், மிளகாய் தூள், கரம் மசாலா மற்றும் தேவையான அளவு உப்பு சேர்த்து எண்ணெய் பிரியும் வரை வதக்கவும்.
கலக்குதல்: இப்போது தயாரித்து வைத்துள்ள மசாலா கலவையில், உதிரியாக வடித்து வைத்துள்ள சாதத்தைச் சேர்த்து மெதுவாகக் கிளறவும். சாதம் உடையாமல் மசாலாவுடன் நன்கு கலக்க வேண்டும்.
இறுதி நிலை: இறுதியாகக் கொத்தமல்லி தழை தூவி அடுப்பை அணைத்துவிடவும்.

## உத்தாமணி பயன்கள்



உத்தாமணி (வேலிப்பருத்தி) சித்த மருத்துவத்தில் மிக முக்கிய பங்கு வகிக்கும் ஒரு அற்புதமான மூலிகையாகும். இதன் இலை, வேர், பால் ஆகியவை மருத்துவப் பயன் கொண்டவை.உத்தாமணியின் முக்கிய மருத்துவப் பயன்கள்:சுவாசப் பிரச்சனைகள்: இலைச்சாற்றைத் தேனுடன் கலந்து உட்கொள்ள, ஆஸ்துமா, வீசிங் (மூச்சுத்திணறல்), நெஞ்சு சளி மற்றும் நாள்பட்ட இருமல் குணமாகும்.வாத நோய்கள்: உத்தாமணி வேர் மற்றும் இலைகள் வாத சுரத்துக்கான சிறந்த மருந்தாகும். இதன் இலைகளை வதக்கி துணியில் கட்டி ஒத்தடம் கொடுக்க, கீல்வாதம், முடக்கு வாதம் மற்றும் மூட்டு வலிகள் குறையும். வீக்கம் மற்றும் வலி: இலைச் சாற்றோடு சுண்ணாம்பு சேர்த்து, கால் வீக்கங்களுக்குப் பற்றாகப் போட வீக்கம், வலி விரைவில் வடியும்.குடல் புழுக்கள்: இதன் வேரை உலர்த்திப் பொடி செய்து பாலில் கலந்து கொடுக்க, குழந்தைகளின் குடல் புழுக்கள் மற்றும் கிருமிகள் நீங்கும்.மகளிர் நலம்: குழந்தை பெற்ற பெண்களுக்கு, உத்தாமணி இலைச்சாற்றுடன் தேன் கலந்து கொடுத்து வர, தாய்ப்பால் அதிகமாகச் சுரக்கும். மேலும், சீரற்ற மாதவிடாய் பிரச்சனையை சரிசெய்யவும் பயன்படுகிறது.யானைக்கால் நோய்: தொடக்க நிலையில் இருக்கும் யானைக்கால் நோயை, இந்த மூலிகையின் பயன்பாடு மூலம் 48 நாட்களில் குறைக்கலாம்.ரத்த அழுத்தம்: இதன் இலைகளை, பாலுடன் சேர்த்து அருந்தி வர, ரத்த அழுத்தம் (பித்தம்) குறையும்.பயன்படுத்தும் முறை:பொதுவாக இலைச்சாறு 5-10 மிலி வரை எடுத்து தேனுடன் கலந்து பயன்படுத்தப்படுகிறது.வீக்கங்களுக்குப் பற்று மற்றும் ஒத்தடமாகப் பயன்படுத்தப்படுகிறது.குறிப்பு: இந்த மூலிகையைப் பயன்படுத்தும் முன் சித்த மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது நல்லது.

# எனக்கு அழைப்பே வரவில்லை.. 'கருப்பு' படவிழா பற்றி காட்டமாக பதிவிட்ட த்ரிஷா



சமீபத்தில் கருப்பு படத்தின் இசை வெளியீட்டு விழா மதுரையில் நடைபெற்றது. பிரம்மாண்டமாக நடத்தப்பட்ட அந்த நிகழ்ச்சியில் சூர்யா, RJ பாலாஜி உட்பட முக்கிய பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

ஆனால் படத்தின் ஹீரோயின் ஆன நடிகை த்ரிஷாவு மட்டும் வரவில்லை. அது பெரிய பேசுபொருள் ஆனது.

எனக்கு அழைப்பே வரவில்லை..

இந்நிலையில் நடிகை த்ரிஷாவுக்கும் படக்குழுவுக்கும் இருக்கும் பிரச்சனை த்ரிஷாவின் பதிவால் உறுதி ஆகி இருக்கிறது.

ஆடியோ லாஞ்சுக்கு போகாதது ஏன் என ஒருவர் கேட்க, த்ரிஷா அதற்கு பதில் அளித்துள்ளார். “எனக்கு அழைப்பே வரவில்லை” என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தற்போது த்ரிஷாவுக்கு மட்டும் தனியாக டீசர் வெளியிட்டு இருக்கும் நிலையில், அதற்கு நெட்டிசன் ஒருவர் 'த்ரிஷா படத்தில் இருப்பதையே மறந்துவிட்டேன்' என கமெண்ட் செய்திருக்கிறார்.

“நானும் மறந்துவிட்டேன். இப்போதாவது அவர்கள் REMINDER செட் செய்தார்களே” என த்ரிஷா பதிவிட்டு உள்ளார்.



## சினிமா

நடிகை ப்ரீத்தி அஸ்ரானியின் லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்கள் வெளியாகி யுள்ளது. இதோ அந்த புகைப் படங்கள்:

# சின்ன தம்பி உன்னை நம்பி.. விஜய்க்கு இளையராஜா ஆதரவா? பாடலை பகிர்ந்தது ஏன்



சமீபத்தில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் மே 4ம் தேதி எண்ணபட்ட இருக்கிறது.

நடிகர் விஜய்யின் தவெக எத்தனை இடங்களை ஜெயிக்க போகிறது என மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருந்து வருகிறது.

233 தொகுதிகளில் நேரடியாக தவெக வேட்பாளர்கள் போட்டியிட, எடப்பாடி தொகுதியில் மட்டும் சுயேச்சை வேட்பாளருக்கு விஜய் ஆதரவு அறிவித்தார். இதில் எத்தனை தொகுதிகளில் விஜய் ஜெயிக்க போகிறார் என்பது மே 4ம் தேதி தெரிந்துவிடும்.

இந்நிலையில் இசையமைப்பாளர் இளையராஜா தற்போது தனது YOUTUBE சேனலில் “இது எங்கள் நீதி” படத்தில் வரும் “சின்ன தம்பி உன்னை நம்பி இந்த நாடு காத்திருக்கு” என்ற பாடலை வெளியிட்டு இருக்கிறார்.

விஜய் சின்ன வயதில் ராதிகா உடன் நடித்த இந்த பட பாடலை தேர்தல் ரிசல்ட் நேரத்தில் இளையராஜா வெளியிட்டு இருப்பது இணையவாசிகள் கவனத்தை ஈர்த்து இருக்கிறது.

விஜய்க்கு இளையராஜா ஆதரவு தெரிவிக்கிறாரா என நெட்டிசன்கள் கேட்டு வருகின்றனர்.

# மூளைச்சாவு அடைந்த ராணுவ வீரரின் மனைவி: இதய தானத்தால் 14 வயது சிறுவனுக்கு மறுவாழ்வு

**புதுடெல்லி, மே 5:**

அரியானா மாநிலம் பஞ்சகுலா மாவட்டத்தில் உள்ள சாந்திமந்திர் பகுதியை சேர்ந்த ராணுவ வீரரின் மனைவி, மூளையில் ஏற்பட்ட ரத்தக்கசிவு காரணமாக சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 41 வயதான அந்த பெண்ணுக்கு டாக்டர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், கடந்த 2-ந்தேதி(நேற்று), அவர் மூளைச்சாவு அடைந்துவிட்டதாக டாக்டர்கள் தெரிவித்தனர்.

இதையடுத்து, அந்த பெண்ணின் உடல் உறுப்புகளை தானம் செய்வதற்கு அவரது கணவர், 2 மகள்கள் மற்றும் குடும்பத்தினர் முன்வந்தனர்.

இதற்கிடையில், டெல்லியில் உள்ள இந்திரபிரஸ்தா அப்பல்லோ மருத்துவமனையில் இதய நோய்க்காக சிகிச்சை பெற்று வந்த 14 வயது சிறுவனுக்கு அவசரமாக இதய மாற்று அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

இந்நிலையில், மூளைச்சாவு அடைந்த பெண்ணின் இதயத்தை சிறுவனுக்கு பொருத்த டாக்டர்கள் முடிவு செய்தனர். இதையடுத்து, சண்டிகரில் இருந்து விமானம் மூலம் இதயத்தை டெல்லிக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. இதன்படி, சண்டிகர் விமான நிலைய நிர்வாகம், அரியானா, பஞ்சாப் மற்றும் டெல்லி போக்குவரத்து காவல் துறையினர் ஆகியோரின் கூட்டு முயற்சியால் குறுகிய கால இடைவெளிக்குள் இதயம் டெல்லியில் உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு டாக்டர்கள் அந்த இதயத்தை சிறுவனுக்கு பொருத்தி, அறுவை சசிச்சையை வெற்றிகரமாக செய்து முடித்தனர். இதன் மூலம், 14 வயது சிறுவனுக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளது. தற்போது அந்த சிறுவன் நலமுடன் இருப்பதாகவும், அவரை தீவிர சிகிச்சைப் பிரிவில் வைத்து டாக்டர்கள் தொடர்ந்து கண்காணித்து வருவதாகவும் மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மேற்கு வங்கத்தின் பால்டா தொகுதியில் மே 21-ல் மறுதேர்தல்

**கொல்கத்தா, மே 5:**



மேற்கு வங்க மாநிலம் பால்டா சட்டப்பேரவைத் தொகுதியில் நடைபெற்ற வாக்குப் பதிவின் போது, ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறாக பல்வேறு முறைகேடுகள் அரங்கேறியதைத் தொடர்ந்து, அங்குள்ள அனைத்து 285 வாக்குச் சாவடிகளிலும் மறு தேர்தல் நடத்த இந்தியத் தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, மே 21-ம் தேதி மீண்டும் வாக்குப்பதிவு நடைபெறும்; மே 24-ம் தேதி வாக்குகள் எண்ணப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கு வங்கத்தில் இன்று 293 தொகுதிகளுக்கு மட்டும் வாக்கு எண்ணிக்கை நடைபெறுகிறது.

வாக்குப்பதிவு இயந்திரங்களில் கறுப்பு நிற டேப் ஒட்டி வாக்குகளைத் தடுத்தது முதல், வாக்காளர்களைக் கண்டறிய வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்தியது வரை பல்வேறு முறைகேடுகள் குறித்த முக்கிய தகவல்களை தேர்தல் ஆணையம் அம்பலப்படுத்தியுள்ளது. பால்டா தொகுதியில் முறையான வாக்காளர்களை வாக்களிக்க விடாமல் தடுத்ததோடு, வாக்குப்பதிவு இயந்திரங்களில் உள்ள குறிப்பிட்ட வேட்பாளர்களின் சின்னங்களுக்கு நேராக கறுப்பு நிற டேப் ஒட்டப்பட்டு, அந்தப் பொத்தான்களை அழுத்த முடியாதபடி முடக்கியதாக புகார்கள் எழுந்தது.

மேலும், அதிர்ச்சியூட்டும் தகவலாக, வாக்குப்பதிவு இயந்திரத்தின் பொத்தான்களில் வாசனைத் திரவியம் மற்றும் மையைப் பூசி, வாக்களித்துவிட்டு வரும் வாக்காளர்களின் விரல்களில் ஏற்படும் வாசனை மற்றும் நிறத்தை வைத்து அவர்கள் யாருக்கு வாக்களித்தார்கள் என்பதைக் கண்டறியும் சட்டவிரோதச் செயல்களும் பல வாக்குச் சாவடிகளில் அரங்கேறியுள்ளன. இது வாக்களிப்பதன் ரகசியத் தன்மையை முற்றிலுமாகச் சிதைப்பதாக அமைந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மேலும், தொகுதி முழுவதும் பரவலாக வாக்குச் சாவடிகள் கைப்பற்றப்பட்டதையும், உண்மையான வாக்காளர்கள் மிரட்டப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டதையும் தேர்தல் பார்வையாளர்கள் உறுதி செய்துள்ளனர். தேர்தல் அலுவலர்களே வாக்காளர்களுக்கு வழிகாட்டுவது போல வாக்குப்பதிவு அறைக்குள் நுழைந்து முறைகேடுகளிலும் ஈடுபட்டது வீடியோ பதிவுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாகவே. மேற்கு வங்க மாநிலத் தலைமைத் தேர்தல் அதிகாரியின் பரிந்துரையை ஏற்று, பால்டா தொகுதித் தேர்தலை ரத்து செய்து முழுமையான மறுதேர்தலை நடத்தும் முடிவுக்கு வந்ததாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

# இந்திய எரிவாயு கப்பல்: 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்

**புதுடெல்லி, மே 5:**

ஹோர்முஸ் நீரிணையைக் கடந்த இந்திய எரிவாயு கப்பல்: 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் வந்தடையும்.

'எம்.டி. சர்வசக்தி' என்னும் அந்த சரக்குக் கப்பல் வரும் 13-ஆம் தேதி விசாகப்பட்டினம் துறைமுகம் வந்தடையும் என தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

எம்.டி. சர்வ சக்தி என்ற சரக்குக் கப்பல், 46,313 மில்லியன் டன் எல்பிஜி எரிவாயு ஏற்றி கொண்டு ஹோர்முஸ் நீரிணையை சனிக்கிழமை கடந்தது. அந்தக் கப்பலில் 18 இந்திய மாலுமிகள் உள்பட மொத்தம் 20 மாலுமிகள் உள்ளனர். அந்த கப்பல் வரும் 13-ஆம் தேதி ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை மாலை நிலவரப்படி அந்த கப்பல், ஓமன் வளைகுடாவில் நின்று கொண்டிருந்தது. இக்கப்பலில் உள்ள எரிவாயு மூலம் நாட்டில் அரைநாள் எரிவாயு தேவையை பூர்த்தி செய்ய முடியும்.

ஈரான், அமெரிக்கா, இஸ்ரேல் இடையேயான போர் தொடங்கிய பிறகு, ஹோர்முஸ் நீரிணையைக் கடந்து வந்த முதல் இந்திய எரிவாயு கப்பல் 'சர்வ சக்தி' ஆகும்.

இந்த கப்பல் தவிர, ஹோர்முஸ் நீரிணையை கடக்க முடியாமல் கடற்பகுதியில் இந்தியாவுக்கு சொந்தமான 14 சரக்குக் கப்பல்கள் நங்கூரமிட்டு நின்று கொண்டிருக்கின்றன என்று மத்திய அரசு குறிப்பிட்டுள்ளது.

# ராஜஸ்தான் ராயல்ஸை கையகப்படுத்திய மிட்டல் குடும்பம், அதர் பூனாவாலா: மதிப்பு ரூ. 15,600 கோடி!

**புதுடெல்லி, மே 5:**

ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் பெருவாரியான பங்குகளை, இந்திய தொழிலதிபர்களான லக்ஷ்மி என். மிட்டல், அவர் மகன் ஆதித்யா மிட்டல், அதார் பூனாவாலா ஆகியோர் இணைந்து ரூ.15,600 கோடிக்கு கையகப்படுத்தியுள்ளனர்.

முன்னதாக அந்த அணியை, அமெரிக்காவை சேர்ந்த தொழிலதிபர் கால் சோமானி, வால்மார்ட் குழுமைத்தைச் சேர்ந்த ராப் வால்டன், ஃபோர்டு மோட்டார் நிறுவனத்தின் உரிமையாளரான ஹம்ப் குடும்பத்தினர் இணைந்த கூட்டமைப்பு ரூ.15,290 கோடிக்கு வாங்குவதாக இருந்தது.

பல்வேறு காரணங்களால் அது நிகழாமல் போனதையடுத்து, தற்போது லக்ஷ்மி என்.மிட்டல், அவர் மகன் ஆதித்யா மிட்டல், அதார் பூனாவாலா ஆகியோர் கூட்டாக, ராஜஸ்தான் அணியின் 75 சதவீத பங்குகளை வாங்கியுள்ளனர்.

இந்த ஒப்பந்த மதிப்பானது, ஐபிஎல் அணியான ராஜஸ்தான் ராயல்ஸ், கரீபியன் பிரீமியர் லீக் அணியான பார்படோஸ் ராயல்ஸ், எஸ்ஏ20 அணியான பார்ல் ராயல்ஸ் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். பிசிசிஐ, ஐபிஎல் நிர்வாக கவுன்சில் உள்ளிட்டவை ஒப்புதல் வழங்கவேண்டியுள்ளதால், நடப்பாண்டின் 3}ஆவது காலாண்டில் இந்த உரிமையாளர் மாற்றம் நிறைவடையும் எனத் தெரிகிறது. ராஜஸ்தான் அணியின் 75 சதவீத பங்குகள் மிட்டல் குடும்பத்திடமும், 18 சதவீத பங்குகள் பூனாவாலாவிடமும் இருக்கும் நிலையில், எஞ்சிய 7 சதவீத பங்குகள், மனோஜ் பதாலே உள்ளிட்ட முந்தைய முதலீட்டாளர்கள் வசம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திருப்பதி லட்டு நெய் கொள்முதலில் முறைகேடு: ஒரு நபர் ஆணைய அறிக்கையில் குற்றச்சாட்டு


**திருப்பதி, மே 5:**

ஓய்வுபெற்ற ஐஏஎஸ் அதிகாரி தினேஷ் குமார் தலைமையில் அமைக்கப்பட்ட இந்த ஆணையம், உச்சநீதிமன்ற உத்தரவின் பேரில் அமைக்கப்பட்ட சிறப்பு விசாரணை குழு அறிக்கைக்குப் பிறகு தனது விசாரணையை மேற்கொண்டது. இதில், திருப்பதி தேவஸ்தானம் லட்டு தயாரிப்புக்காக வாங்கிய 70 லட்சம் கிலோவுக்கும் அதிகமான நெய், கட்டாய தரச் சோதனைகள் இன்றி கொள்முதல் செய்யப்பட்டதாக குற்றஞ்சாட்டியது.

அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது: திருப்பதி லட்டு தயாரிப்பில் அமல்படுத்தப்பட வேண்டிய கட்டாய இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (எஃப்எஸ்எஸ்ஏஐ) சோதனைகளை 2022 ஜூலை மாதம் செயல்படுத்த திருப்பதி தேவஸ்தானம் திட்டமிட்டிருந்தது. ஆனால், பின்னர் இந்த தேவையை தேவஸ்தானம் நீக்கியதுடன், கட்டுபாடற்ற நெய் கொள்முதலுக்கு வழிவகுத்தது.

இதையடுத்து, மிகப்பெரிய அளவில் அவசியமான தரச் சோதனைகள் இன்றி நெய் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2022 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற முக்கிய பரிசோதனையின் முடிவுகள் வெளிவராமல் மறைக்கப்பட்டுள்ளன. அதில் லட்டு தயாரிக்கும் நெய்யில் தாவர எண்ணெய் கலப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

# செல்போன் பயன்படுத்துவதை தடுக்க மகளுக்கு பவுன்சர் நியமித்த தந்தை



**அகமதாபாத், மே 5:**

குஜராத் மாநிலம் அகமதாபாத்தைச் சேர்ந்த 16 வயது சிறுமி 24 மணி நேரமும் ஸ்மார்ட்போனில் புகைப்படங்கள் எடுப்பது, அதை சமூகவலைதளங்களில் பதிவேற்றுவது போன்ற செயல்களில் ஈடுபட்டுவந்தார்.

இதை அவரது தந்தை கண்டித்தபோது அவர் கேட்கவில்லை. ஸ்மார்ட் போனுக்கும், சமூக வலைதளங்களுக்கும் அவர் அடிமையாகி விட்டார். இந்நிலையில் அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் பவுன்சர்களை அந்த தந்தை நியமித்துள்ளார்.

இதுகுறித்து அகமதாபாத் நகரைச் சேர்ந்த மனநல மருத்துவர் டாக்டர் முருகேஷ் வைஷ்ணவ் கூறும்போது, "அந்த சிறுமி புகைப்படங்களை பகிரும் வலைதளத்துக்கு அடிமையாகிவிட்டார். ஆன்-லைனில் அறிமுகம் இல்லாத நபர்களுடன் பேசி வந்தார். இதைத் தடுக்க மாதம் ரூ.65 ஆயிரம் சம்பளத்தில் 4 பவுன்சர்களை அந்தத் தந்தை நியமித்திருந்தார்.

ஆனாலும், அவர் செல்போன் பயன்படுத்துவதைத் தடுக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து அவர் என்னிடம் அழைத்து வரப்பட்டார். அவருக்கு மருந்து, மாத்திரைகளைத் தந்து ஆலோசனையும் வழங்கப்பட்டது. இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன" என்றார்.

இது குறித்து ஃபோர்ஸ்11 செக்யூரிட்டி நிறுவனத் தலைவர் நிகில் பாண்டே கூறும்போது, "செல்லப்பிராணியான நாயை தனது 17 வயது மகன் அடித்து உதைக்கிறான் என்ற புகாரின் பேரில் அதைத் தடுக்க 8 பவுன்சர்களை நியமிக்குமாறு சிறுவனின் தந்தை கேட்டுக் கொண்டார். சுமார் 9 மாதங்களாக 2 ஷிப்டுகளில் 8 பவுன்சர்கள் அந்தப் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர்" என்றார்.

அதேபோல தங்களது குழந்தைகள் போதைப் பொருட்களுக்கு அடிமையாவதைத் தடுப்பதை நோக்கிலும் பவுன்சர்களைக் கேட்கும் பெற்றோர்கள் அதிகரித்து வருகின்றனர் என்று அகமதாபாத்தில் செக்யூரிட்டி ஏஜென்சியை நடத்தி வரும் யாசின் மாலிக் தெரிவித்துள்ளார்.

# 'கிளாட் மித்தோஸ்' அச்சுறுத்தல்: இணையவழி பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்க பொதுத் துறை வங்கிகள் முடிவு

**புதுடெல்லி, மே 5:**

கிளாட் மித்தோஸ் மேம்படுத்தப்பட்ட செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்க இணையவழிப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டுச் செலவை அதிகரிக்க பொதுத் துறை வங்கிகள் முடிவு செய்துள்ளன.

சாவதேச அளவில் வங்கிகள், பணப் பரிமாற்றம் சார்ந்த நிதி மோசடிகள் அதிகம் நடைபெறும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உள்ளது. இவை பெரும்பாலும் முதலில் அப்பாவி மக்களைக் குறிவைத்து அவர்களின் வங்கி தொடர்பான விவரங்களை மோசடியாகப் பெற்று பணத்தைப் பறிப்பதாகத் தொடங்கியது. இப்போது, எண்ம (டிஜிட்டல்) கைது, போலி 'க்யூஆர்' குறியீடு எனப் பல வழிகளில் மோசடி அதிகரித்துள்ளது.

இவை பெரும்பாலும் வங்கி வாடிக்கையாளர்களைக் குறிவைத்து நடைபெறுவதால் இது தொடர்பாக மக்களிடம் விழிப்புணர்வை மத்திய அரசு ஏற்படுத்தி வருகிறது. இந்தியாவில் வங்கிக் கணக்கு வைத்திருக்கும் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு காலகட்டத்தில் இந்த இணையவழி நிதி மோசடிக்கான அழைப்புகள், மோசடி குறுஞ்செய்திகளைப் பெற்றவர்களாகவே உள்ளனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில், அமெரிக்காவின் ஆந்த்ரோபிக் நிறுவனம் உருவாக்கியுள்ள 'கிளாட் மித்தோஸ்' ஏஐ தொழில்நுட்பம் தவறாகப் பயன்படுத்தப்படும்போது அது வங்கித் துறைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

ஏனெனில் இந்த ஏஐ தொழில்நுட்பம் இணையவழிப் பாதுகாப்பில் உள்ள சிறிய குறைபாட்டையும் கண்டறிந்து அதன் வழியாக கணினிகள் மற்றும் சர்வர்களுக்குள் ஊடுருவும் திறன்கொண்டது. இதை தேசவிரோதிகள் பயன்படுத்தினால் வங்கி வாடிக்கையாளர்களின் விவரங்களைத் திருடுவது தொடங்கி, ஒட்டுமொத்த வங்கித் துறையின் இணைய சேவை பாதுகாப்பை கேள்விக்குறியாக்கவும் முடியும்.

இதைக் கருத்தில்கொண்டு இணையவழிப் பாதுகாப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக நிதியை அதிகரிக்க வங்கிகள் முடிவு செய்துள்ளன.

# திருப்பதியில் த்ரிஷா சிறப்பு தரிசனம்!

**திருப்பதி, மே 5:**

திருப்பதியில் நடிகை த்ரிஷா நேற்று அதிகாலை சிறப்பு தரிசனம் மேற்கொண்டார்.

நடிகை த்ரிஷா நேற்று தனது பிறந்த நாளை கொண்டாடும் நிலையில், திருமலை ஏழுமலையான் கோயிலில் சுப்ரபாத சேவையில் ஈடுபட்டார்.

அப்போது, 'ரிசல்ட் பக்காவா நம்ம பக்கம்தான்' என்று ரசிகர் ஒருவர் த்ரிஷாவைப் பார்த்து கூறிய நிலையில், அவர் சிரித்த முகத்துடன் நடந்து சென்றார்.

# கேரள முதல்-மந்திரி பினராயி விஜயன் போட்டியிட்ட தொகுதியில் 5 வெடிகுண்டுகள் பறிமுதல்

**கண்ணூர், மே 5:**

கேரள முதல்-மந்திரியாக இருப்பவர் பினராயி விஜயன். இவர் கண்ணூர் மாவட்டம் தர்மடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிட்டார். கேரளத்தில் 140 சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு கடந்த மாதம் 9-ம் தேதி நடந் தது. (திங்கட்கிழமை) வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. இந்த நிலையில் தர்மடம் தன்னடா பகுதியில் வெடிகுண்டு தயாரித்து வைத்து உள்ளதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் எடக்காடு போலீசார், தனிப்படை போலீசார் விரைந்து சென்று அந்த பகுதியில் உள்ள ஒரு வீட்டில் சோதனை நடத்தினர். அங்கு பட்டாசு தயாரிக்கும் நானு என்பவரது வீட்டில் இருந்து சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட 5 வெடிகுண்டுகள், 3 கிலோ வெடிப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் வெடிகுண்டு தடுப்பு பிரிவு நிபுணர்கள் வெடிகுண்டுகளை கைப்பற்றி செயலிழக்க செய்தனர். முதல்-மந்திரி பினராயி விஜயன் போட்டியிட்ட தர்மடம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் வெடிகுண்டுகள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# கைலாஷ்-மானசரோவர் யாத்திரை: லிபுலேக் வழித்தடத்தில் செல்ல நேபாளம் அனுமதி மறுப்பு

**புதுடெல்லி, மே 5:**

உத்தரகண்ட் மாநிலத்தில் உள்ள லிபுலேக் கணவாய் மற்றும் சிக்கிம் மாநிலத்தில் உள்ள நாதுலா கணவாய் ஆகிய இரு பாதைகள் வழியாக வரும் ஜூன் முதல் ஆகஸ்ட் வரை கைலாஷ்-மானசரோவர் யாத்திரை நடைபெறும் என கடந்த ஏப்.30-ஆம் தேதி இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவித்தது.

கைலாய மலை மற்றும் சீனாவின் திபெத் தன்னாட்சி பிராந்தியத்தில் உள்ள மானசரோவர் ஏரிக்கு மேற்கொள்ளப்படும் இந்தப் புனித யாத்திரை ஹிந்துக்கள், சமணர்கள் மற்றும் பௌத்தர்களிடையே மத ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்தது. கல்வான் பள்ளத்தாக்கில் இந்தியா-சீனா இடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து 5 ஆண்டுகளாக இந்த யாத்திரை நடைபெறாமல் இருந்தது. பின்னர் இருதரப்பு உறவை வலுப்படுத்த இரு நாடுகளும் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து, கடந்த ஆண்டு கைலாஷ்-மானசரோவர் யாத்திரை மீண்டும் தொடங்கப்பட்டது.

இந்நிலையில், நிகழாண்டு இந்த யாத்திரைக்கு எதிர்ப்பு தெரிவித்து நேபாள வெளியுறவு அமைச்சகம் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பில், '1816-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுகௌலி ஒப்பந்தத்தின்படி மகாகாளி ஆற்றின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள லிபுலேக், லிம்பியாதுரா மற்றும் காலாபானி ஆகிய பிராந்தியங்கள் நேபாளத்துக்குச் சொந்தமானவை. யாத்திரைக்கான பாதையை இறுதிசெய்யும் முன் இந்தியா எங்களிடம் கலந்தாலோசிக்கவில்லை. எனவே கைலாஷ்-மானசரோவர் யாத்திரைக்கு நேபாளத்தின் லிபுலேக் கணவாய் வழித்தடத்தை அனுமதிக்க முடியாது என்பதை இந்தியா மற்றும் சீனாவிடம் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்' எனத் தெரிவிக்கப்பட்டது.

செயற்கையான முறையில் தன்னிச்சையாக பிராந்தியங்களை உரிமை கோர முடியாது என நேபாளத்துக்கு இந்திய வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ரண்தீர் ஜெய்ஸ்வால் ஞாயிற்றுக்கிழமை பதிலடி கொடுத்தார்.

# 'ஆப்டோசார்' செயற்கைக்கோள் விண்ணில் வெற்றிகரமாக நிலைநிறுத்தம்

**பெங்களூரு, மே 5:**

கர்நாடகம் மாநிலம், பெங்களூருவைச் சேர்ந்த கேலக்ஸிஸ்ஐ புத்தாக்க நிறுவனமானத்தால் 'திருஷ்டி' திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட முதன்மை செயற்கைக்கோளான 'ஆப்டோசார்'-ஐ ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவின் கலிஃபோர்னியாவில் இருந்து ஸ்பேஸ்எக்ஸ் ஃபால்கன் 9 ராக்கெட் மூலம் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியதன் மூலம், நாட்டின் தனியார் விண்வெளித் துறை ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தத் திட்டம், நாட்டின் வர்த்தக விண்வெளிச் சூழலுக்கு ஒரு குறிப்பிடத்தக்க உத்வேகமாக அமைந்துள்ளதுடன், ஒரு உலகளாவிய ஏவுதளத்தில் மேம்பட்ட உள்நாட்டுப் புத்தாக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. 190 கிலோகிராம் எடை கொண்ட செயற்கைக்கோளான 'ஆப்டோசார்' ஒரு இந்திய தனியார் நிறுவனத்தால் இதுவரை உருவாக்கப்பட்டதிலேயே மிகப்பெரிய செயற்கைக்கோள் ஆகும். மின்-ஒளியியல் (எலக்ட்ரோ-ஆப்டிகல்) சென்சார் மற்றும் செயற்கை துளை ரேடார் சென்சார் ஆகிய இருவேறு பிம்பமாக்கல் தொழில்நுட்பங்களையும் ஒரே செயல்பாட்டுத் தளத்தில் ஒருங்கிணைக்கும் செயற்கைக்கோள் ஆகும். இது, விண்வெளித் தொழில்நுட்பத்தின் எல்லைகளை விரிவுபடுத்தும் புதிய தலைமுறை புத்தாக்க நிறுவனங்களில் கேலக்ஸிஸ்ஐ இடம்பெறச் செய்துள்ளது.

'ஆப்டோசார்' செயற்கைக்கோள், புவிவட்டப் பாதையில் வெற்றிகரமாக நிலைநிறுத்தப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, அதன் செயல்பாட்டைத் தொடங்கும் பணிகளில் கவனம் செலுத்தி வருவதாகவும், இது, வழக்கமான பிம்பமாக்கல் அமைப்பு முறைகளில் உள்ள குறைபாடுகளுக்குத் தீர்வளிப்பதுடன், பலதரப்பட்ட காலச் சூழல்களிலும் சீரான மற்றும் நிலையான தரவு சேகரிப்பை உறுதி செய்யும் என நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## வியாசர்பாடியில் வீட்டின் பூட்டை உடைத்து 89 கிராம் நகை திருட்டு




**சென்னை, மே.05:** சென்னை, வியாசர்பாடி, சுந்தரம் 3-வது தெருவைச் சேர்ந்தவர் கனிமொழி (29). இவர் தனது கணவர் மற்றும் குழந்தைகளுடன் ஒரு அடுக்குமாடி குடியிருப்பின் முதல் தளத்தில் வசித்து வருகிறார். அதே கட்டிடத்தின் தரை தளத்தில், அவரது பெற்றோர்கள் வசித்து வருகின்றனர்.

கடந்த ஏப்.4ம் தேதி கனிமொழி தனது கணவருடன் வெளியூர் சென்றிருந்தார். அன்று இரவு அவரது பெற்றோர் வீட்டைப் பூட்டி உறங்கச் சென்றனர். மறுநாள் காலை வந்து பார்த்தபோது, வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டு பீரோவில் இருந்த 89 கிராம் தங்க நகைகள், 500 கிராம் வெள்ளிப் பொருட்கள், ரூ.2 ஆயிரம் ரொக்கம் மற்றும் ஒரு லேப் டாப் ஆகியவை திருடப்பட்டிருப்பது தெரியவந்தது.

இது குறித்து, கனிமொழி அளித்த புகாரின் பேரில் வியாசர்பாடி போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி, வியாசர்பாடியைச் சேர்ந்த அஜித் (25) மற்றும் 16 வயது சிறுவன் என்பது தெரியவந்தது. தலைமறைவாக இருந்த அஜித்தை கைது செய்த போலீஸார். அவருடன் இருந்த சிறுவனையும் பிடித்தனர். கைதான அஜித்திடம் இருந்து 77 கிராம் தங்க நகைகள், 500 கிராம் வெள்ளிப் பொருட்கள் மற்றும் ஒரு லேப் டாப் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட அஜித் ஒரு 'சரித்திர பதிவேடு' குற்றவாளி ஆவார். இவர் மீது 2 கொலை முயற்சி வழக்குகள், கஞ்சா கடத்தல், வழிப்பறி மற்றும் திருட்டு என மொத்தம் 21 குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பது விசாரணையில் தெரியவந்தது. இதையடுத்து, கைது செய்யப்பட்ட அஜித் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருடன் பிடிபட்ட 16 வயது சிறுவன் அரசு கூர்நோக்கு இல்லத்தில் சேர்க்கப்பட்டார்.

## சென்னை: கன்டெய்னர் லாரி மோதி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் உயிரிழப்பு




**சென்னை, மே.05:** சென்னையில், உறவினர் வீட்டுக்கு சென்றுவிட்டு பைக்கில் வீடு திரும்பிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர், கன்டெய்னர் லாரி மோதி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர்.

சென்னை, அம்பத்தூர் அடுத்த ஓரகடம், எம்ஜிஆர் தெருவைச் சேர்ந்தவர் கார்த்திகேயன் (42) கார் ஓட்டுநர். இவரது மனைவி பிரேமலதா (40). இவர்களது 8 வயது மகன் இன்ப செல்வன், அப்பகுதியில் உள்ள தனியார் பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வந்தான். நேற்று முன்தினம் மாலை கார்த்திகேயன் தனது மனைவி மற்றும் மகனுடன் பைக்கில் கொடுங்கையூரில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்று விட்டு, இரவு சுமார் 9 மணியளவில் அவர்கள் வீடு திரும்பிக் கொண்டிருந்தனர்.

மாதவரம் ஆந்திர பேருந்து நிலையம் அருகே அவர்கள் வந்து கொண்டிருந்த போது, பேருந்து நிலையத்தில் இருந்து ஆந்திர மாநில அரசுப் பேருந்து ஒன்று வெளியே வந்தது. அப்போது, பின்னால் வந்து கொண் டிருந்த கன்டெய்னர் லாரியின் ஓட்டுநர், பேருந்து வருவதைப் பார்த்து பிரேக் பிடித்துள்ளார். அப்போது, கட்டுப்பாட்டை இழந்த லாரி, பேருந்தின் பின் பகுதியில் லேசாக மோதியதோடு, முன்னால் சென்ற கார்த்திகேயனின் பைக் மீதும் பலமாக மோதியது.

இதில் நிலைத் தடுமாறிய கார்த்திகேயன், பிரேமலதா மற்றும் சிறுவன் இன்ப செல்வன் ஆகிய மூவரும் ஒரே பக்கமாக கீழே விழுந்தனர். கண் இமைக்கும் நேரத்தில் லாரியின் சக்கரம் அவர்கள் மீது ஏறி இறங்கியதில், மூவரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து, சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்த போலீஸார், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த லாரி ஓட்டுநர் அன்பரசன் (40) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## லாரியில் கடத்தி வந்த ரூ.20 லட்சம் மதிப்புள்ள குட்கா பறிமுதல்

தூத்துக்குடி மாவட்டத்தில் சட்டவிரோத போதைப்பொருட்கள் பயன்பாடு மற்றும் கடத்தலை கட்டுப்படுத்தும் வகையில் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு மதன் உத்தரவின் பேரில் போலீசார் தீவிர நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சாத்தான்குளம் போலீஸ் சரகத்துக்கு உட்பட்ட பகுதியில், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா புகையிலைகளை ஏற்றிக்கொண்டு வாகனம் செல்வதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் பேரில் தனிப்படை சப்-இன்ஸ்பெக்டர் முத்துராஜா தலைமையிலான போலீசார் கடத்தலை தடுக்க தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சாத்தான்குளம் போலீஸ் சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் சப்-இன்ஸ்பெக்டர் முத்துராஜா மற்றும் சாத்தான்குளம் போலீசார் இணைந்து ரோந்து சென்றனர். அப்போது பேய்குளம் பகுதியில் சந்தேகத்திற்கு இடமாக வந்த லாரியை போலீசார் நிறுத்திய போது, அதனை ஓட்டி வந்த டிரைவர் மற்றும் வாகனத்தில் இருந்தவர்கள் கீழே இறங்கி ஓட்டம் பிடித்தனர்.

இதனைத் தொடர்ந்து போலீசார் லாரியில் ஏறி சோதனை நடத்திய போது, அதில் ரூ.20 லட்சம் மதிப்பிலான 450 கிலோ குட்கா புகையிலை மூட்டைகள் மற்றும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட புகையிலைகள் இருந்தது. அதனை கைப்பற்றி பறிமுதல் செய்த போலீசார், தப்பி ஓடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருச்செந்தூர் கோவிலில் அலைமோதிய பக்தர்கள் கூட்டம்




**திருச்செந்தூர், மே.05:** முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாள்தோறும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து மட்டுமல்லாமல் ஆந்திரா, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி போன்ற மாநிலங்களில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து செல்கின்றனர்.

கோடை விடுமுறையை ஒட்டி கடந்த 2 வாரமாக திருச்செந்தூரில் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. வரும் வாரம் பிளஸ்-2, எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு முடிவுகள் வெளியாக உள்ள நிலையில் தேர்வுகளில் வெற்றி பெறவும், உயர் கல்வியில் இடம் கிடைக்கவும், வேலை வாய்ப்புகள் கிடைக்க வேண்டியும் பெற்றோர் குடும்பத்துடன் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்தவாறு உள்ளனர். இன்று ஞாயிறு விடுமுறை நாள் என்பதால் கோவிலில் கூட்டம் வழக்கத்தை விட அதிகமாக காணப்பட்டது. பக்தர்கள் அதிகாலையில் இருந்தே கடல் மற்றும் நாழிக்கிணறு புனித தீர்த்தத்தில் நீராடி நீண்ட வரிசையில் சுமார் 3 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

கோவில் நடை வழக்கம்போல் இன்று காலை அதிகாலை 4 மணிக்கு திறக்கப்பட்டது. 5 மணிக்கு விஸ்வரூபம், 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்று வருகின்றன.

## கண்டெய்னர் லாரி மீது ஆம்னி பஸ் மோதி விபத்து-15-க்கும் மேற்பட்ட பயணிகள் காயம்

**பெரம்பலூர், மே.5:** பெரம்பலூரில் இருந்து மும்பை நோக்கி ஒரு கண்டெய்னர் லாரி புறப்பட்டு வந்து கொண்டு இருந்தது. இந்த லாரி சேலம் மாவட்டம் ஆத்தூர் அடுத்த காந்திபுரம் பகுதியில் நள்ளிரவில் வந்து கொண்டு இருந்தது. அப்போதுதிடீரெனகண்டெய்னர் லாரி பழுதாகியுள்ளது. இதையடுத்து கண்டெய்னர் லாரி டிரைவர் லாரியை சரிசெய்ய சேலம்-சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கண்டெய்னர் லாரியை ஓட்டி சென்றார்.



ஆம்னி பஸ்சில் பயணம் செய்த 15-க்கும் மேற்பட்ட பயணிகள் காயம் அடைந்தனர்.

அப்போது கரூரில் இருந்து சென்னை நோக்கி ஒரு ஆம்னி பஸ் சென்று கொண்டு இருந்தது. பஸ்சில் 36 பயணிகள் இருந்தனர். அப்போது ஆம்னி பஸ் எதிர்பாராதவிதமாக கண்டெய்னர் லாரி மீது மோதி விபத்தானது. இந்த விபத்தில் இரவு நேரம் என்பதால் அனைவரும் அயர்ந்து தூங்கி கொண்டு இருந்தனர். அந்த நேரத்தில் இந்த விபத்து நடந்ததால் பஸ்சில் இருந்த பயணிகள் அனைவரும் அலறி சத்தம் போட்டனர்.

இந்த விபத்து பற்றி தெரியவந்ததும் ஆத்தூர் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்தனர். பின்னர் விபத்தில் காயம் அடைந்த ஆம்னி பஸ் பயணிகள் 15-க்கும் மேற்பட்டோரை மீட்டு சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் கண்டெய்னர் லாரியில் வந்த அரியானாவை சேர்ந்த 3 பேரும் காயம் அடைந்தனர். அவர்களையும் மீட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து 4 பெண்கள் உள்பட 6 பேர் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்து ஆத்தூர் ஊரக போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## குறைந்த வயதில் உலக சாதனை... பால்க் நீரிணையை நீந்தி கடந்த ராஞ்சி சிறுவன்



**ராமேஸ்வரம், மே.05:** ஜார்கண்ட் மாநிலம் ராஞ்சி மாவட்டத்தில் உள்ள துர்வா பகுதியை சேர்ந்த இஷாங்க் சிங் (7), இளம் வயதிலேயே நீச்சல் பயிற்சி பெற்று, பல போட்டிகளில் பங்கேற்று அனைவரையும் வியக்க வைத்தான். இந்நிலையில் ஆபத்து நிறைந்த பால்க் நீரிணையை நீந்தி கடப்பதற்காக துர்வா அணையில் தீவிர பயிற்சி மேற்கொண்டான்.

பின்னர் வெள்ளிக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில், இருள் சூழ்ந்த நேரத்தில், இலங்கையின் தலைமன்னார் கடற்பகுதியிலிருந்து பால்க் நீரிணையில் இஷாங்க் தனது நீச்சல் சாதனை பயணத்தைத் தொடங்கினான். நடுக்கடலில் ஆக்ரோஷமான அலைகள், கடும் நீரோட்டம் எனப் பல தடைகள் இருந்தன.

இஷாங்க் எதற்கும் அஞ்சாமல் விடாமுயற்சியுடன் நீந்தினான். சுமார் 29 கிலோமீட்டர் தூரத்தை 9 மணி நேரம் 50 நிமிடங்களில் கடந்து, மதியம் 1.50 மணிக்கு இந்தியாவின் தனுஷ்கோடியை வந்தடைந்தான்.

இஷாங்கின் இந்த சாதனையை அங்கீகரித்து யுனிவர்சல் ரெக்கார்ட்ஸ் போரம் (URF) உலக சாதனை சான்றிதழை வழங்கியது. மிகக் குறைந்த வயதில் பால்க் நீரிணையை நீந்திக் கடந்த முதல் சிறுவன் என்ற பெருமையை இஷாங்க் பெற்றான்.

## தொடர் விடுமுறை - சிறப்பு பஸ்கள் மூலம் ரூ.3.44 கோடி வருவாய் ஈட்டி போக்குவரத்து கழகம் சாதனை



**சென்னை, மே.05:** மே தினம், சித்ரா பவுர்ணமி மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பாக கடந்த 30-ந்தேதி தமிழகம் முழுவதும் பல்வேறு நகரங்களுக்கு சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன.

இந்த சிறப்பு பஸ்கள் மூலம் ரூ.3 கோடியே 44 லட்சத்து 44 ஆயிரத்து 52 வருவாய் கிடைத்து உள்ளது. சிறப்பு பஸ்கள் மொத்தம் 6 லட்சத்து 55 ஆயிரத்து 593 கிலோ மீட்டருக்கு இயக்கப்பட்டன.

ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.52.54 என்ற அளவில் வருவாய் ஈட்டப்பட்டு உள்ளது. இது அரசு விரைவு போக்குவரத்து கழக வரலாற்றில் ஒரு கிலோ மீட்டருக்கு ஈட்டப்பட்ட உச்சபட்ச வருவாய் ஆகும்.

இது கடந்த காலத்தில் 22.5.2023 அன்று கோயம்பேடு பஸ் நிலையத்தில் இருந்து இயக்கப்பட்டபோது ஒரு கிலோ மீட்டருக்கு ஈட்டிய வருவாய் ரூ.51.53 யை காட்டிலும் ரூ.1.01 அதிம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த சாதனையை அடைய இரவு, பகலாக சிறப்பாக பணியாற்றிய டிரைவர்கள், கண்டக்டர்கள், தொழில்நுட்ப பணியாளர்கள், பாதுகாவலர்கள், கட்டுப்பாட்டு பிரிவு பொறுப்பாளர்கள், ஓட்டுநர் பயிற்சி ஆசிரியர்கள், பரிசோதகர்கள், பணிமனை, அலுவலக பணியாளர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள், அலுவலகமேற்பார்வையாளர்கள், பொறியாளர்கள், கிளை மேலாளர்கள், மற்றும் அனைத்து அலுவலர்களையும் அரசு விரைவு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் பாராட்டி உள்ளார்.

## பறக்கும் படை பறிமுதல் செய்த பொருட்களில் உரிய ஆவணம் கொடுத்தவர்களிடம் ரூ.17 கோடி ஒப்படைப்பு




பறக்கும் படையால் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களில் உரிய ஆவணங்கள் சமர்ப்பித்தவர்களிடம் ரூ.16.94 கோடி பணம் மீண்டும் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும், ஆட்சியருமான பிரதாப் வெளியிடப்பட்ட அறிக்கை: தமிழகசட்டப்பேரவை தேர்தலுக்கான அட்டவணை கடந்த மார்ச் 15ம் தேதி வெளியிடப்பட்டதை தொடர்ந்து, அன்று முதல் தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டன.

திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட 10 பேரவைத் தொகுதிகளில், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்தபோது, உரிய ஆவணங்களின்றி மற்றும் சந்தேகத்துக்கு இடமான வகையில் எடுத்து செல்லப்படும் பணம், மதிப்புமிக்கப் பொருட்கள் ஆகியவற்றை கண்காணிக்கும் பொருட்டு திருவள்ளூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான பிரதாப் தேர்தல் பறக்கும் படை, நிலையான கண்காணிப்புக் குழு ஆகியவற்றை நியமித்தார்.

திருவள்ளூர் தேர்தல் மாவட்டத்துக்கு உட்பட்ட 10 தொகுதிகளில், தேர்தல் நடத்தை விதிகள் அமலில் இருந்தபோது, தேர்தல் பறக்கும் படைகள், நிலையான கண்காணிப்புக் குழுக்கள் உள்ளிட்ட பிற துறைகளால், உரிய ஆவணங்களின்றி, சந்தேகத்துக்கு இடமான வகையில் எடுத்து செல்லப்பட்ட ரூ.17,70,30,547 ரொக்கம், ரூ.73,58,28,713 மதிப்புமிக்க பொருட்கள், ரூ.15,81,38,293 மதிப் புள்ள இதர வகையிலான பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் மதிப்புமிக்கப் பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு, சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் உரிய ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்து திரும்ப பெற்றுக் கொள்ள ஏதுவாக, திருவள்ளூர் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியரால் அமைக்கப் பட்டிருந்த மாவட்ட குறைதீர் குழு மற்றும் மாவட்ட வருமானவரித் துறை, மாநில சரக்கு மற்றும் சேவை வரித்துறை உள்ளிட்ட பிற துறைகளால், 254 மனுக்கள், பரிசீலனை செய்யப்பட்டு, உரிய ஆதாரங்கள் சமர்பிக்கப்பட்ட இனங்களுக்கு. ரூ.16,94,79,342 ரொக்கம், ரூ.73.09,93,756 மதிப்புமிக்கப் பொருட்கள். ரூ.64.39.113 மதிப்புள்ள இதர வகையிலான பொருட்கள் விடுவிப்பு செய்யப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கக் கோரி 5 மனுக்கள் பரிசீலனையிலும், உரிய ஆவணங்கள் சமர்பிக்காத 14 கைப்பற்றுகை தொடர்பாக சம்பந்தப்பட்ட பேரவைத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்களால் வழக்குப் பதிவுகளும் செய்யப்பட்டுள்ளன.

## தமிழகத்தில் கத்திரி வெயில் தொடங்கியது; 5 டிகிரி வெப்பநிலை உயரும்: வானிலை ஆய்வு மையம்

சென்னை: தமிழகத்தில் கத்திரி வெயில் நாளை தொடங்குகிறது என்றும், தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும் எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கியதில் இருந்து கடும் வெயில் வாட்டி வதைத்து வருகிறது. தினமும் பல நகரங்களில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு மேல் அதிகபட்ச வெப்பநிலை பதிவாகி வருகிறது.

பகலில் கடும் வெயிலும், மாலை மற்றும் இரவில் கடும் புழுக்கமும் நிலவி வருகிறது. அதனால் பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்வதை தவிர்த்து வருகின்றனர். இந்நிலையில், தமிழகத்தில் நாளை அக்னி நட்சத்திரம் எனப்படும் கத்திரி வெயில் தொடங்கி வரும் மே 28-ம் தேதி வரை 25 நாட்களுக்கு நீடிக்க உள்ளது.



தமிழகத்தில் நாளை முதல் மே 9-ம் தேதி வரை தமிழகத்தில் மழைக்கான வாய்ப்பு குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தெற்கு சத்தீஸ்கர் முதல் குமரிக்கடல் வரை தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக, சுமார் 1.5 கிமீ உயரத்தில் ஒரு வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் நாளை (மே 4) முதல் மே 9-ம் தேதி வரை ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம், நாமக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், திருவண்ணாமலை, கரூர் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களிலும், 5-ம் தேதி, நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களிலும் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) கூடிய கன மழை பெய்யக்கூடும்.

6-ம் தேதி நீலகிரி, கோவை மாவட்டத்தின் மலை பகுதிகள், தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களிலும், 7-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், மதுரை, தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு மாவட்டங்களிலும், 8-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கைமற்றும்புதுக்கோட்டை மாவட்டங்களிலும், 9-ம் தேதி நீலகிரி, கோவை, திருப்பூர், ஈரோடு, தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், தென்காசி, கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம், சிவகங்கைமற்றும்புதுக்கோட்டை மாவட்டங்களிலும் ஒரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 30 முதல் 40 கிமீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரியில் நாளை அதிகபட்ச வெப்பநிலை வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை உயரக்கூடும். 5 முதல் 7-ம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை வழக்கமான அளவிலேயே இருக்கும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 102 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 84 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி அதிகபட்சமாக மதுரை மாவட்டம் வாடிப்பட்டியில் 10 செமீ, சிவகங்கை மாவட்டம் திருப்புவனத்தில் 8 செமீ, மதுரை மாவட்டம் சோழவந்தான், சாத்தயார், தானியமங்கலத்தில் தலா 6 செமீ மழை பதிவாகியுள்ளது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் மின் விநியோகத்தில் இதுவரை சிக்கல் ஏற்படவில்லை: மின்வாரிய தலைவர் தகவல்

**சென்னை, மே.05:** சென்னையில் ஜெ.ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தியாவிலேயே மிக உச்சபட்ச மின் நுகர்வு தமிழகத்தில்தான் பதிவாகியுள்ளது. 21,000 மெகா வாட் முதல் 23,000 மெகா வாட் வரை மின் நுகர்வு உயர்ந்துள்ளது. குறைந்தபட்சமே 18,000 மெகா வாட்டாக உள்ளது. பகல், இரவு நேரங்களில் 21,000 முதல் 22,000 மெகா வாட் வரை தேவை உள்ளது.

12 மணிவரை இருந்த மின் தேவை, தற்போது நள்ளிரவு 1 மணிவரை நீடிக்கிறது. இந்த ஆண்டு 9 சதவீத மின் தேவை வளர்ச்சி இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப இதுவரை இல்லாத அளவிலான உச்சத்தை தமிழகம் எட்டியுள்ளது. மாநில அரசின் உற்பத்தி, மத்திய அரசு நிறுவனங்களின் மின் பகிர்வு மற்றும் நீண்ட கால ஒப்பந்தங்கள் மூலம் மின்சாரம் பெறப்படுகிறது.

தமிழகத்தில் 11,000 மெகா வாட் சோலார் மற்றும் 11,000 மெகாவாட் காற்றாலை மின் திறன் உள்ளது. பகல் நேரத்தில் சோலார் உற்பத்தி கைகொடுக்கிறது. காற்றாலை சீசன் இன்னும் தொடங்காத நிலையிலும், உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் மின் விநியோகத்தில் இதுவரை சிக்கல் எழவில்லை. இரவு நேரங்களில் மின் தேவையைப் பூர்த்தி செய்யப் பிற மாநிலங்களில் இருந்து மின்சாரம் வாங்கப்படுகிறது. சில நேரங்களில் உபரி மின்சாரம் விற்கவும் செய்யப்படுகிறது.

மின் நுகர்வு தொடர்பான புகார்களை விசாரிக்க பீக் ஹவர்ஸ் சமயங்களில் சிறப்புத் துணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மின் விசிறிகள் முதல் ஏசி வரை பயன்பாடு அதிகரித்துள்ளது. மேலும் உணவகங்கள் மற்றும் வீடுகளில் மின்சார அடுப்புகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதும் முக்கியக் காரணமாகும். இரவு நேரங்களில் தொழில் துறையினரின் மின் தேவையும் அதிகரித்துள்ளது.

# சென்னைக்கு 5 மாதம் நீர் இருப்பு கிருஷ்ணா நீர் வரத்து 10 நாளில் தொடங்கும்



**சென்னை, மே.05:** கிருஷ்ணா நதியில் இருந்து நீர் விநியோகம் மே மாத இடையில் மீண்டும் தொடங்கும். தற்போது சென்னை நகருக்கான நீர் இருப்பு சீராக உள்ளது. மழை பெய்யாவிட்டாலும் சென்னை நகரின் தினசரி விநியோகத்துக்கான சுமார் 1,246 மில்லியன் லிட்டரை குறைந்த பட்சம் 5 மாதங்களுக்கு தொடர முடியும். அந்த அளவுக்கு இருப்பு உள்ளது என்று சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது. கோடை வெப்பம் அதிகரித்து வரும் நிலையில் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களில் நீர் இருப்பு சற்று குறைந்துள்ளது. இதனிடையே கிருஷ்ணா நதியின் நீர் வரத்தை முன்னிட்டு நீர் நிலைகளை இணைக்கும் கால்வாய்களில் மேம்பாட்டுப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. ஆந்திராவில் இருந்து மே மாதம் இரண்டாம் வாரத்தில், அதாவது இன்னும் ஏறக்குறைய 10 நாட்களில் நீர் விநியோகம் மீண்டும் தொடங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு சென்னை நகரின் நீர் இருப்பு நிலை சீராக உள்ளதாகவும், மழை பெய்யாவிட்டால் குறைந்த பட்சம் 5 மாதங்களுக்கு தினசரி நீர் விநியோகம் தொடரும் என்றும் சென்னைக் குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது. சமீபத்திய புள்ளி விவரத்தின்படி செம்பரம்பாக்கம் மற்றும் செங்குன்றம் உள்ளிட்ட 5 முக்கிய நீர்த் தேக்கங்களின் மொத்த நீர் இருப்பு 7,681 மில்லியன் கன அடியாக இருந்தது. இந்த அளவு அந்த நீர்த் தேக்கங்களின் மொத்த கொள்ளளவில் சுமார் 65.3% ஆகும். இது கடந்த ஆண்டின் மே தொடக்கத்தின் இதே நாளுடன் ஒப்பிடும்போது 62 மில்லியன் கன அடி. இருப்பினும் வீராணம் ஏரி தொடர்ந்து நீர் விநியோகத்தை நிறைவு செய்து வருகிறது. நீர் சேமிப்பு மட்டங்களை சமநிலைப்படுத்தவும், சென்னைக்கு குடிநீர் விநியோகத்தை உறுதி செய்யவும் கிருஷ்ணா நீர் வழங்கல் அவசியமாக இருந்தது.

இதற்கிடையே, ஆந்திராவின் எல்லையில் உள்ள கண்டலேறு - பூண்டி கால்வாயில் பராமரிப்பு பணியை மேற்கொள்ள ஆந்திர மாநில அதிகாரிகள் கடந்த மார்ச் மாதம் கண்டலேறு நீர்த் தேக்கத்தில் இருந்து பூண்டிக்கு வரும் நீரை நிறுத்தி வைத்திருந்தனர். பராமரிப்பு பணிகள் நிறைவடைய உள்ள நிலையில், ஆந்திர மாநிலத்தின் தேவைகளை நீர்த் தேவையை பூர்த்தி செய்த பிறகே கிருஷ்ணா நீர் மே மாத இரண்டாம் வாரத்தில் சென்னை எல்லைக்குள் வரும் வாய்ப்புள்ளது. சென்னைக்கு குடிநீர் வழங்க நீர் சேமிப்பை அதிகரிக்க, இந்த கால கட்டத்தில் சென்னை நகருக்கு சுமார் குறைந்தபட்சம் 3 ஆயிரம் மில்லியன் கன அடி கிருஷ்ணாநீர் வந்தடையும் என்று எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஆத்தூர் அருகே நள்ளிரவு விபத்து; கன்டெய்னர் மீது சென்னை பஸ் மோதி 15 பேர் படுகாயம்



ஆத்தூர், மே.05: ஆத்தூர் அருகே கன்டெய்னர் லாரி மீது மின்னல் வேகத்தில் மோதிய விபத்தல் 15 பேர் படுகாயம் அடைந்த நிலையில், 6 பேருக்கு கால் எழும்பு முறிந்தது. விபத்து குறித்து போலீசார் விசாரித்து வருகின்றனர். பெரம்பலூரில் இருந்து மும்பைக்கு டயர் லோடு ஏற்றிக்கொண்டு கன்டெய்னர் லாரி நேற்று புறப்பட்டது. சேலம் மாவட்டம், ஆத்தூர் அருகே காந்திபுரம் பகுதியில் நேற்று மதியம் 2 மணி அளவில் லாரி வந்துகொண்டிருந்த போது பிரேக் டவுன் ஆனது. இதனால் அங்குள்ள சர்வீஸ் ரோட்டில் லாரியை நிறுத்தி பழுது பார்க்கும் பணி நடந்தது. அந்த பணி முடிந்து நள்ளிரவு 1 மணி அளவில் கன்டெய்னர் லாரியை அருகில் உள்ள மற்றொரு சர்வீஸ் சாலைக்கு எடுத்து செல்ல முயன்றனர்.

அந்த நேரத்தில் நாமக்கல்லில் இருந்து 36 பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்னை நோக்கி ஆம்னி பஸ் ஒன்று வேகமாக வந்தது. நாமக்கல்லை சேர்ந்த அன்பழகன் (34) என்பவர் பஸ்சை ஓட்டி வந்தார்.

அப்போது கன்டெய்னர் லாரி பின்பக்கமாக வருவதை கவனிக்காமல் மின்னல் வேகத்தில் பஸ்சை ஓட்டி வந்த நிலையில், கண் இமைக்கும் நேரத்தில் ஆம்னி பஸ் பலமாக கன்டெய்னர் லாரி மீது மோதியது. இதில் பஸ்சில் முன்பக்கம் நொறுங்கியது. பஸ் மோதிய வேகத்தில் லாரி நடுரோட்டில் கவிழ்ந்தது.

இந்த விபத்தால் பஸ்சில் தூங்கிக்கொண்டிருந்த பயணிகள் அலறினர். சத்தம் கேட்டு அப்பகுதியினர் மற்றும் அவ்வழியாக வாகனங்களில் சென்றவர்கள் ஓடிவந்து விபத்தில் சிக்கி படுகாயம் அடைந்தவர்களை மீட்டனர். தகவல் அறிந்து ஆத்தூர் போலீசாரும் விரைந்து வந்து படுகாயம் அடைந்தவர்களை மீட்டு, 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த விபத்தில் பஸ்சில் பயணம் செய்த பச்சமுத்து (20), வினோத் (35), ரம்யா (32), சுப்பிரமணி (52), கன்டெய்னர் லாரியை ஓட்டி வந்த அரியானா மாநிலத்தைச் சேர்ந்த அருள் (33), மற்றும் லாரியில் பயணித்த இருவர் உள்ளிட்ட 15 பேர் படுகாயம் அடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். பஸ் டிரைவர் (மாற்று) குமரன், பச்சமுத்து, ரம்யா, காந்திமதி, மோகனப்பிரியா, நிவாசனி ஆகிய 6 பேருக்கு கால் எலும்பு முறிந்தது. அவர்கள் மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். தொடர்ந்து இதுபற்றி வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# கத்திரி வெயில் இன்று தொடங்க உள்ள நிலையில் சென்னை மக்களை வாட்டி வதைத்த வெயில்



**சென்னை, மே.05:** கத்திரி வெயில் இன்று தொடங்க உள்ள நிலையில் சென்னையில் நேற்று வெயிலின் தாக்கம் மிக கடுமையாக இருந்தது. இதன் காரணமாக சென்னைவாசிகள் தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்து வீடுகளுக்கு உள்ளேயே முடங்கினர். தமிழகம் முழுவதும் கடந்த பிப்ரவரி மாதம் இறுதியில் இருந்து வெயில் வாட்டி எடுத்து வருகிறது. மார்ச், ஏப்ரல் மாதங்களில் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரித்தது. குறிப்பாக ஏப்ரல் மாதம் பல மாவட்டங்களில் வெயில் சதத்தை கடந்தது. இதனால், மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். வெயிலின் தாக்கத்தால் மக்கள் காலை 11 மணிக்கு மேல் தேவையில்லாமல் வெளியில் செல்வதை தவிர்க்க தொடங்கினர். வீடுகளிலேயே முடங்கிய காட்சியை காண முடிந்தது. சென்னை, வேலூர், திருச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் வெயிலின் தாக்கம் அதிமாக இருந்தது. இந்த நிலையில் வெயிலின் உக்கிரம் என்று அழைக்கப்படுகின்ற கத்தரி வெயில் இன்று தொடங்க உள்ளது. இந்த கத்திரி வெயிலின் தாக்கம் வரும் 28ம் தேதி வரை நீடிக்கிறது.

அதாவது, 25 நாட்கள் கத்திரி வெயில் வாட்டி வதைக்க உள்ளது. இன்று கத்திரி வெயில் தொடங் உள்ள நிலையில் நேற்று பல மாவட்டங்களில் வெயில் வாட்டி எடுக்க தொடங்கியது. குறிப்பாக சென்னையை பொறுத்தவரை நேற்று காலை 8 மணி முதல் வெயில் வாட்டி எடுக்க தொடங்கியது. காலை 10 மணிக்கு மேல் வெயிலின் தாக்கம் மேலும் அதிகரித்தது. 11 மணிக்கு மேல் வெளியில் செல்ல முடியாத அளவுக்கு வெயில் சுட்டெரிக்க தொடங்கியது.

வெளியில் நடந்து சென்றால் மயக்கம் அடையும் அளவுக்கு வெயிலின் உக்கிரம் இருந்தது. சிறிது நேரத்திலேயே உடல் முழுவதும் வியர்த்து அணிந்து இருக்கும் உடையை தொப்பு, தொப்பு என்று ஈரமாகும் அளவுக்கு வெயில் வாட்டி எடுத்தது.பஸ், ரயில்களில் சென்றவர்கள் வெயிலின் தாக்கத்தால் கடும் அவதிக்குள்ளாகினர். அந்த அளவுக்கு அனல் கக்கியது. இருக்கையில் உட்கார முடியாத அளவுக்கு வெப்பம் அதிகமாக இருந்தது.

ஜன்னல் வழியாக அனல் காற்று கக்கியது. குடை இருந்தால் மட்டுமே கொஞ்சம் வெளியில் செல்லலாம் என்ற அளவில் தான் சென்னையில் நேற்று வெப்பத்தின் தாக்கம் இருந்தது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம். அனைவரும் வீட்டில் இருப்பது வழக்கம். இந்த விடுமுறை தினத்தை பயன்படுத்தி மக்கள் வெளியில் செல்வது வழக்கம். ஆனால் அடித்த வெயிலால் மக்கள் வீடுகளுக்கு வீடுகளுக்கு உள்ளேயே முடங்கினர்.

# நாடு முழுவதும் 22 லட்சம் மாணவர்கள் ‘நீட்’ தேர்வு எழுதினர்

**சென்னை, மே.05:** இளநிலை மருத்துவப் படிப்புகளில் சேர்க்கை பெறுவதற்கான நீட் தேர்வு நாடு முழுவதும் 5,500 மையங்களில் நேற்று நடைபெற்றது. 22 லட்சம் மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் வெளியாகிறது.

நாடு முழுவதும் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் எம்பிபிஎஸ், பிடிஎஸ் படிப்புகள், சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி படிப்புகள், ராணுவக் கல்லூரிகளில் பிஎஸ்சி நர்சிங் படிப்புகள் மற்றும் கால்நடை மருத்துவப் படிப்பின் அகில இந்திய ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவை ‘நீட்’ தேர்வில் தகுதி பெறுபவர்களைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. இத்தேர்வை தேசிய தேர்வுகள் முகமை(என்டிஏ) ஆண்டுதோறும் நடத்துகிறது.

அதன்படி, 2026-27-ம் கல்வி ஆண்டுக்கான நீட் தேர்வு நேற்று பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றது. நாடு முழுவதும் 551 நகரங்கள் மற்றும் துபாய், அபுதாபி, தோகா, மஸ்கட், ரியாத், சிங்கப்பூர் உள்ளிட்ட 14 வெளிநாடுகள் என சுமார் 5,500 மையங்களில் தேர்வு நடைபெற்றது.

விண்ணப்பித்த 22.80 லட்சம் பேரில் 22 லட்சத்துக்கும் மேற்பட்டோர் (97 சதவீதம்) பங்கேற்றனர். தமிழகத்தில் சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், திருச்சி, மதுரை, கோவை உட்பட 31 நகரங்களில் தேர்வு நடந்தது. சென்னையில் 30 ஆயிரம் பேர் உட்பட தமிழகத்தில் 1.75 லட்சம் பேர் தேர்வு எழுதினர்.

தேர்வு மையங்கள் அனைத்தும் சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்பட்டன. தேர்வு மையங்களைக் கண்காணிக்க ஒருங்கிணைப்பாளர்கள், கண்காணிப்பாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். தேர்வு பிற்பகல் 2 மணிக்கு தொடங்கியது.

முன்னதாக, காலை 11 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மெட்டல் டிடெக்டர் மூலம் சோதனை செய்த பிறகு தேர்வு அறைக்கு மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். ஆள்மாறாட்டத்தை தடுக்கும் வகையில் ஆதார் அடிப்படையில் பயோமெட்ரிக் முறையில் மாணவர்களின் அடையாளம் உறுதி செய்யப்பட்டது. தாமதமாக வந்தவர்கள் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

தேர்வு மையத்துக்குள் ஹால் டிக்கெட்டை மட்டும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்டது. மோதிரம், வளையல், கம்மல், மூக்குத்தி, செயின், கண்ணாடி, தாயத்து, பெல்ட் அணிந்து வந்தவர்கள் அவற்றை கழற்றி பெற்றோரிடம் கொடுத்த பிறகு, உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மதம், கலாச்சாரம் சார்ந்த ஆடைகள், அதிக உயரம் கொண்ட ஷூக்கள், காலணிகள், செல்போன், கால்குலேட்டர் உள்ளிட்ட மின்னணு சாதனங்கள் ஆகியவை அனுமதிக்கப்படவில்லை.

தமிழ், ஆங்கிலம், இந்தி உட்பட 13 மொழிகளில் தேர்வு நடைபெற்றது. இயற்பியல், வேதியியல், உயிரியல் (தாவரவியல், விலங்கியல்) பாடங்களில் தலா 50 கேள்விகள் என மொத்தம் 200 கேள்விகள் கேட்கப்பட்டது. அதில் 180 கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு 4 மதிப்பெண் என மொத்தம் 720 மதிப்பெண்கள் வழங்கப்படும். ஒரு தவறான பதிலுக்கு ஒரு மதிப்பெண் (நெகட்டிவ்) குறைக்கப்படும்.

இயற்பியல் பாடக் கேள்விகள் கடினமாகவும், வேதியியல், உயிரியல் பாடக் கேள்விகள் எளிதாகவும் இருந்ததாக மாணவர்கள் கூறினர். நீட் தேர்வு முடிவுகள் அடுத்த மாதம் வெளியாக உள்ளது.

## அரசியல் கார்னர்

# வெற்றி பெறும் தவெக வேட்பாளர்களை மாமல்லபுரம் ‘ரிசார்ட்’டில் பாதுகாக்க திட்டம்: நிர்வாகிகள் ரகசிய ஏற்பாடு

**சென்னை, மே.05:** வெளியாகும் தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தனது கட்சி எம்எல்ஏ-க்களை பாதுகாக்க மாமல்லபுரத்தில் ரகசிய ஏற்பாடுகளை தவெக செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை இன்று நடக்கிறது. இந்த தேர்தலில் 233 தொகுதிகளில் விஜய்யின் தவெக தனித்துப் போட்டியிடுகிறது. எடப்பாடி தொகுதியில் மட்டும் சுயேச்சை வேட்பாளருக்கு ஆதரவு அளித்துள்ளது. தேர்தலுக்கு பிந்தைய பெரும்பாலான கருத்துக்கணிப்பு முடிவுகள் திமுகவுக்கு வெற்றி வாய்ப்பு இருப்பதாக தெரிவித்துள்ளன.

இருப்பினும் விஜய் தரப்போ, தவெக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கும் என பெரிதும் நம்புகிறது. இதனிடையே, சில தொகுதிகளில் வெற்றி பெறும் தவெக வேட்பாளர்களை குதிரை பேரத்தின் அடிப்படையில் இழுக்க திமுக, அதிமுக முயற்சி செய்யலாம் என விஜய்க்கு தகவல் கிடைத்ததாக கூறப்படுகிறது.

இதையடுத்து, 2 நாட்களுக்கு முன்பு கட்சியின் வேட்பாளர்களுடன் ஆலோசனை நடத்திய விஜய், ‘வெற்றி பெற்றதும் வேறு எங்கும் செல்லாமல் எந்நேரமாக இருந்தாலும் பனையூருக்கு வந்துவிட வேண்டும். உங்களுக்காக நான் காத்திருப்பேன்’ என அறிவுறுத்தியிருந்தார்.

இந்நிலையில், மாமல்லபுரம் அருகே பூஞ்சேரியில் உள்ள ஒரு தனியார் விடுதியை தவெகவினர் தயார் செய்து வைத்துள்ள தகவல் கசிந்துள்ளது. வெற்றி பெறும் வேட்பாளர்களை அங்கு தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து தவெக வட்டாரங்கள் கூறியதாவது: தேர்தல் முடிவுகள் எங்களுக்கு சாதகமாகவே இருக்கும். எப்போதும் இல்லாத வகையில் இந்த முறை வாக்கு சதவீதம் உயர்ந்து இருப்பதே இதற்கு சாட்சி. எனவே தான் தவெக ஆட்சியமைக்கும் என விஜய் நம்புகிறார். அதேநேரத்தில், தொங்கு சட்டப்பேரவை அமையும் பட்சத்தில் திமுக மற்றும் அதிமுக எங்களது வேட்பாளர்களைக் குதிரை பேரம் மூலம் இழுக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல் வந்துள்ளது.

ஏற்கெனவே எடப்பாடியில் தவெக போட்டியிட முடியாதபடி சதி செய்தார்கள். அதற்கு சுயேச்சையை ஆதரித்து விஜய் பதிலடி கொடுத்தார். தற்போது தேர்தல் முடிவுகளுக்குப் பின் நடக்கக்கூடிய குதிரை பேர அரசியலை முறியடிக்க தெளிவான திட்டத்தை விஜய் வகுத்திருக்கிறார்.

அதன்படி, வெற்றி பெற்ற எம்எல்ஏ-க்களை பாதுகாப்பாக வைக்க பூஞ்சேரியில் உள்ள தனியார் விடுதியில் 100 பேர் தங்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வேட்பாளர்களை சிதறாமல் அந்த இடத்துக்கு அழைத்து வரும் முக்கிய பொறுப்பை ஆதவ் அர்ஜுனாவிடம் விஜய் ஒப்படைத்துள்ளார். இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# கள நிலவரத்தை நேரில் பார்த்து அறிந்தேன் தமிழ்நாட்டில் திமுக ஆட்சி தொடரும்: விஜய் பெயரால் சூதாட்டம் நடக்கிறது திருமாவளவன் பரபரப்பு பேட்டி

**சென்னை, மே.05:** விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் தமிழக சட்டசபை தேர்தல் முடிந்ததும் ஓய்வுக்காக பெங்களூரு சென்றிருந்தார். நேற்று மதியம் அவர் பெங்களூருவில் இருந்து இண்டிகோ ஏர்லைன்ஸ் பயணிகள் விமானத்தில் சென்னைக்கு திரும்பி வந்தார். விமானநிலையத்தில் திருமாவளவன் அளித்த பேட்டி: தேர்தலுக்கு பிந்திய கருத்துக்கணிப்புகள் பெரும்பாலானவை, திமுக கூட்டணி வெற்றி பெற்று, திமுக தனித்து ஆட்சி அமைக்கும் என்று கூறியுள்ளன. ஆனால் ஒரு சில நிறுவனங்களின் கருத்துக்கணிப்புகள் அதற்கு நேர்மாறான கருத்துகளை கூறியுள்ளன. நான் களத்தில் நேரடியாக மக்களை சந்தித்த விதத்தில், இந்த தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி, மகத்தான வெற்றியை பெற்று, திமுக தனித்து ஆட்சியை அமைக்கும். தேர்தலில் விசிகவினர் சரிவர கூட்டணி கட்சிக்கு தேர்தல் பணியாற்றவில்லை என்று கூறியது, எங்களுடைய கட்சிக்காரர்களுக்காக பேசியது. அதை சிலர் ஊதி பெரிதுபடுத்துகின்றனர். விடுதலை சிறுத்தைகள் கட்சியை, குறிவைத்து திமுக கூட்டணிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்காக, தொடர்ந்து முயற்சிக்கின்றனர். அவர்கள் முயற்சியில் மண் விழுந்து விட்டது. அவர்கள் ஆசை நிறைவேறவில்லை. திமுக கூட்டணியை சிதறடிக்க எத்தனையோ பகீரத முயற்சிகளை மேற்கொண்டனர். அத்தனை முயற்சிகளையும் முறியடித்தது, எங்களுடைய விடுதலை சிறுத்தைகள் கட்சி. மீண்டும் அவர்கள் ஏமார்ந்து போவார்கள்.

தமிழ்நாட்டில் தொங்கு சட்டசபை அமையும். விஜய் ஆட்சியைப் பிடிப்பார் என்று அனைத்து நிறுவனங்களும் கருத்துக்கணிப்புகள் வெளியிடவில்லை. வட இந்தியாவை சேர்ந்த ஆர்எஸ்எஸ் பின்னணி, பாஜ ஆதரவு, வலதுசாரி இயக்கங்களை சேர்ந்தவர்கள் அவ்வாறு கருத்துகளை வெளியிடுகின்றனர். விஜய் பெயரில் ஏராளமான பெட்டிங்கள், சூதாட்டங்கள் நடக்கிறது.

இந்த சூதாட்ட கும்பல் கிளப்புகிற வதந்தி தான் இது. தேர்தலுக்கு முன்பு திமுகவை முன்வைத்து, சூதாட்டத்தை நடத்தினர். அகில உலக அளவில் அது நடந்தது. இப்போது தேர்தல் வாக்குப் பதிவுக்கு பின்பு, விஜய்யை முன்வைத்து இந்த சூதாட்ட காய்களை நகர்த்துகின்றனர். தேர்தல் முடிவுகளுக்குப் பின்பு அவர்கள் ஏமாந்து போவார்கள். முன்னாள் டிஜிபி என்பதால், ஒரு போலீஸ் அதிகாரி, விஜய்க்கு ஆதரவாக கூறுவது சரியாகிவிடுமா? இது முழுக்க முழுக்க 100% பெட்டிங் தான். சூதாட்ட நடவடிக்கைக்காக எடுக்கப்படும் மீடியா கைஃப். நாளை தேர்தல் முடிவு வரப் போகிறது.

அப்போது பாருங்கள். தொங்கு சட்டசபை தமிழ்நாட்டில் அமையாது. நேரடியாக நான் 40க்கும் மேற்பட்ட தொகுதிகளை பார்த்த அனுபவத்தில் கூறுகிறேன். மக்களிடம் ஒரு எழுச்சி

சோசியல் மீடியா விஜய்யை மிகவும் உயர்த்திப் பிடிக்கின்றனர். ஒவ்வொரு புதிய கட்சிகள் தொடங்கும் போதும், அல்லது நடிகர்கள் கட்சிகளுக்கு வரும்போதும், இதேபோல் கூட்டம் கூடுவது வழக்கம் தான். ஆனால் நடிகர் விஜயகாந்த் வந்த போது, இந்த அளவு சோசியல் மீடியா இல்லை. வைகோ, ராமதாஸ் கட்சி தொடங்கிய போது சோசியல் மீடியா இந்த அளவு கிடையாது. இப்போது அதிகமான சோசியல் மீடியாக்கள் வந்து விட்டன. அந்த சோசியல் மீடியாக்கள் தான் உயர்த்தி பிடித்து, இதுபோன்ற ஒரு நிலையை உருவாக்குகின்றனர். இளைஞர்கள் நிறைய பேர், இளைய தலைமுறையினர், விஜய்க்கு எதிராக, இந்த தேர்தலில் வாக்களித்து இருக்கின்றனர்.

ஆனால் அதையெல்லாம், சோசியல் மீடியாக்கள் பெரிது படுத்துவதோ, கூறுவதோ கிடையாது. 100% இளைஞர்கள் விஜய்யை ஆதரிக்கவில்லை. எதிர்ப்பாக ஏராளமான இளைஞர்கள், இளைய தலைமுறையினர் இருக்கின்றனர். ஆனால் அதை பெரிதுபடுத்தாமல், ஒருவரை மட்டும் ஹீரோவாக்கி, அவருக்கு பின்னால் இருப்பதை மட்டுமே, பெரிதுபடுத்திக் கொண்டு வருகிறது இந்த சோசியல் மீடியாக்கள். இதைப் போன்ற ஒரு

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM